## உங்கள் வயது 18க்கு மேற்பட்டுவிட்டதா?

**அப்படியாயின் உங்கள் சரியான விலாசம் எழுதப்பட்ட முத்திரையுடன் கூடிய தபால் உறையொன்றை அனுப்புங்கள்**

உங்களுக்குத் தேவையானவை, உங்கள் குறைபாடுகள், மனதில் இருக்கும் யாவற்றையும் நான் அறிவேன். நான் அனுப்பும் அந்த விபரங்களைப் பார்ப்பதினால் நீங்கள் புதுமை அடைவீர்கள். ஆண் பெண் பேதம் அல்லது மதபேதம் இல்லை. இன்றே உங்கள் விலாசத்தை அனுப்பி உங்கள் வாழ்க்கையைப்பற்றி நான் கூறும் விபரங்கள் உண்மையானவையா எனப்பாருங்கள். இன்னும் எந்த வகையான காரணத்திற்காகவோ மனவேதனை, தொல்லை துன்பம் இருப்பின் அதைத் தீர்த்துவைத்து எண்ணத்தை நிறைவேற்றித் தருவேன். இரகசியம் வெளியிடப்படமாட்டாது.

**பதிவு செய்யப்பட்ட மாந்திரீக கலாநிதி,**

## பி. எம். திசநாயக்கா

**ஆரூத எண்ணெய் தலைமைக் காரியாலயம்,**
**கம்பளை**



**ஓர் நற்செய்தி!**

# யானை ஸ்பெஷல் பீடி

# SPECIAL ELEPHANT BEEDI

குணம் நிறைந்ததும் சுறுசுறுப்பைக் கொடுப்பதும்

**யானை ஸ்பெஷல் பீடிகளே!**

தெரிவு செய்யப்பட்ட புகையிலையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலாளர்களைக் கொண்டு செய்யப்படுவது

**யானை ஸ்பெஷல் பீடிகளே!**

உள்நாட்டுக் கைத்தொழிலை ஊக்குவிப்பதும் உங்களுக்கு நன்மை தருவதும்

**யானை பீடி ஸ்பெஷல் பீடிகளே**

## யானை பீடிக் கம்பெனி

**கொழும்பு 12**




தயாரிப்பாளர்கள்:-

**RVG பீடிக் கம்பெனி,**

34, மானிப்பாய் ரோட், யாழ்ப்பாணம்.

**நினைவுமலர்கள் வெளியிடுவோரே!**
**பாடசாலை அதிபர்களே!**
**புத்தக ஆசிரியர்களே!**
**பத்திரிகை நிர்வாகிகளே!**

குறைந்த செலவில்

**சிறந்த 'புளக்'குகள்**

செய்ய வேண்டுமானால்
எங்களுக்கு எழுதுங்கள்

**Sri Lanka Block Makers**

131, MESSENGER STREET - COLOMBO

# இலக்கியம் பிறக்க.....!

எந்த நாட்டு எழுத்தாளர்களுக்கும் இந்த நாட்டு எழுத்தாளர்கள் சளைத்தவர்களல்லர். இவர்களால் எழுத முடியும்; உயர்ந்த இலக்கியங்களை, உலகம் புகழும் இலக்கியங்களைப் படைக்க முடியும்; எதிர்காலத்தில் இலக்கியத்திற்குரிய நோபல் பரிசுகள் அனைத்தும் இந்நாட்டு எழுத்தாளர்கட்கே கிடைக்கும்.

இப்படிப் பொங்கியெழுந்து சிங்கநாதம் செய்பவர்கள்......?

வாசகர்களல்லர்; விமர்சகர்களல்லர்; இந்நாட்டின் தமிழ் எழுத்தாளர்கள்தாம்!

தேசீய இலக்கியத்திற்கு வரைவிலக்கணம் சொன்னார்கள். யதார்த்த இலக்கியம் இப்படித்தான் அமையவேண்டும் என்றார்கள். பிரக்ஞைபூர்வமாக ஆக்க இலக்கியம் படைத்து இந்திய எழுத்தாளரை இதோ புறங்காண்கின்றோம் என்றார்கள்.

பொறுமையுடன் கேட்டுப் பெருமையுடனிருந்தோம்.

''முடியும்'' என்றார்கள்; காத்திருந்தோம்.

''முடிந்ததா?'' என்கிறோம்; கையை விரிக்கின்றார்களே!

தன்னம்பிக்கை இருக்கவேண்டியதுதான். அதை நாமும் பாராட்ட வேண்டியதுதான். ஆனால், வீண் தருக்குடன் வெறுங் குடத்தில் அடிப்பதையே வழக்கமாக்கிக் கொள்ளலாமா? மேடையேறுவதும் மார்பைத் தட்டுவதும் கையை அசைப்பதும் கதறிக் கொட்டுவதுந்தாம் நம்நாட்டு எழுத்தாளர்களின் கைவந்த கலையா?

''பிரசுர வசதியில்லை; பத்திரிகையின் ஆதரவு இல்லை'' என்பதெல்லாம் ''நொண்டிக் குதிரை''யின் ''சறுக்குச்'' சாட்டுகள்.

கம்பனுக்கும் கபிலனுக்கும் தொல்காப்பியனுக்கும் வள்ளுவனுக்கும் எந்த அச்சகத்தினர் ஆதரவு கொடுத்தனர்?

உயர்வே உள்ளும் உள்ளம் இருந்தால்-மற்றையோர் ஏற்றுக் கொள்ளும் வகையில் அவற்றை வெளியே தள்ளும் திறமை இருந்தால் - இன்னல் துடைக்கவும் இன்பம் படைக்கவும் அந்த எண்ணங்களால் முடியும என்றால்—

அவற்றை இலக்கியமாக உருவாக்கத்தான் வேண்டும்.

பேச்சைக குறைத்து, போட்டியை நிறுத்தி, போலிப் பெருமையை ஒழித்து, புனிதமான இலக்கியத்தைப் படைக்க இந்நாட்டு எழுத்தாளர்கள் முன்வரவேண்டும்.

இந்நாட்டு எழுத்தாளர்கள், தக்காரா? தகவிலரா? என்பதை அவர்களே தீர்மானித்துக்கொள்ளவேண்டாம். எதிர்காலம் அப் பணியைச் செய்யட்டும். அதற்குதவியாக, எழுத்தாளர்கள் தம் 'எச்சத்தை' விட்டுச் செல்லட்டும்.

# அன்பார்ந்த நேயர்களே!

வணக்கம். தரத்தில்உயர்ந்தசிறு கதை, கவிதை, கட்டுரைகளையே ''கலைச்செல்வி'' மூலம் நாம் உங்களுக்கு அளித்து வருகின்றோம். எனினும், ஈழத்தின் பழம்பெரும் எழுத்தாளர்களின் படைப்புகளை இப்போது பார்க்கவோ, படிக்கவோ முடியவில்லையே எனப் பலர் எழுதியுள்ளீர்கள். என்ன காரணத்தினாலோ, பழையவர்களிடம் ஒரு வித சோர்வு மனப்பான்மை ஏற்பட்டு விட்டது. அந்தச் சோர்வை அகற்றிச் சுவையான படைப்புகளை ஆக்கும்படி பலருக்கு எழுதியுள்ளோம். அவைகள் நமக்குக் கிடைத்ததும் ''கலைச்செல்வி'' மூலம் உங்களை வந்தடையும். புதிய தொடர்கதையைப் பற்றிய விபரங்கள் அடுத்த இதழில் வெளியாகின்றன.

இந்த இதழில் "யாருக்குத் திருமணமோ" என்ற கவிதையை எழுதிய மாவிட்டபுர ஆனந்தன் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் மாணவராயிருக்கின்றார். வானொலியிலும், வார இதழ்கள் சிலவற்றிலும் இவருடைய கவிதைகள் முன்பு இடம்பெற்றுள்ளன. ''மனக்குர''வின் உரிமையாளர் எம். வாமதேவன், மலையகத்து நல்ல எழுத்தாளர்களுள் ஒருவர். கொட்டகலையிலுள்ளவூட்டன் பாடசாலையிற்பணி புரிகின்றார். ''பிரசவம்'' கதையைப் பிரசவித்த வள்ளிமணாளன் கொழும்பிலுள்ள பொலிசுத் தலைமையகத்தைச் சேர்ந்தவர். ''எடை''யின் ஆசிரியர் இராசரத்தினம் கட்டைப்பிராயில் வாழும் இளைஞர். நகைச்சுவை எழுத்தாளர் பொ. சண்முகநாதன் ''றிச்சேட் கிழ''வனைத் தந்துள்ளார். சமீபத்தில் பேராதனையிலுள்ள இலங்கைப் பல்கலைக் கழகத்தில் அறிவியல் விழா நடைபெற்றது. விழாவையொட்டிக் கவிஞர் சபா. ஜெயராசா எழுதியனுப்பிய கவிதை ''தமிழால் முடியும்!''. இலங்கையர்கோன் நினைவுச் சிறுகதைப் போட்டியில் முதற்பரிசையீட்டிய முனியப்பதாசன் இப்போது புதிய பார்வையில் சிறுகதைகளை எழுதி வருகின்றார். ''வரையறை'' அவருடைய நல்ல கதைகளுள் ஒன்று. அவ்வப்போது சில அரசியற் கட்டுரைகளையும் ''கலைச்செல்வி''யில் வெளியிட எண்ணியுள்ளோம். இந்த இதழில் இலங்கை இந்தியர் பிரச்சனை பற்றித் தமிழன்மகன் எழுதியுள்ளார். கட்டுரையாளரின் கருத்துக்களே ''கலைச்செல்வி''யின் கருத்துக்களுமாகும் என எவரும் கருதக் கூடாது.

பேராதனை—இலங்கைப் பல்கலைக் கழக மாணவி இ. கோமளா தேவி, நல்லூர் தி. சரஸ்வதி, கல்வியங்காடு து. இராஜமலர், சீனன் குடாத் தபால் நிலைய அதிபர் இ. செ. தியாகராசா ஆகியோர் புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துப் பணமனுப்பியுள்ளனர். இவர்களனைவர்க்கும் நமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

''கலைச்செல்வி''க்குக் கதை, கட்டுரைகள் அனுப்புவோருக்கு இரண்டு வாரத்திற்குள் முடிவைத் தெரிவிப்போம் என எழுதினோமல்லவா? ஒவ்வொரு நாளும் ஏராளமான விடயங்கள் வருவதால், அந்தக் கால எல்லையுள் நம்முடிவைத் தெரிவிக்கமுடியாமலிருக்கின்றது. கூடிய வரை, உங்கள் கதைகள் கிடைத்த ஒரு மாத காலத்திற்குள் எமது முடிவைத் தெரிவிக்க முயல்கின்றோம்.

வணக்கம்.

—ஆசிரியர்.

# யாருக்குத் திருமணமோ?

## 'மாவிட்டபுர ஆனந்தன்'

வானமென்ற நீலநெடும் பந்தரிட்டு
வண்ணமுகில் வெண்துகிலால் வெள்ளைகட்டித்
தேனொளியைச் சிந்திடவே திங்களென்ற
தீபமதை ஏற்றிவைத்துப் பட்டு முல்லைக்
கானகமே கண்களின் முன் காணபதென்னக்
கண்ணிமைக்குந் தாரகைகள் தொங்கக்கூட்டி
காணுகிற கண்மயங்க வைத்தே, யாரின்
கல்யாணத் திற்கோ இங் கலங்கரித்தார்?

தவழுகின்ற சிற்றாறின் சலசலப்பு
தண்மை மிகு பாட்டாகப் பரிணமிக்க,
அவஞ் செய்யும் அரவங்கள், பூச்சி யாவும்
அதற்கேற்பக் குழலூதி இனிமை நல்க,
கவர்ச்சிநிறை நெற்கதிர்கள் இசையுக்கேற்பக்
கனிவுடனே அசைந்தாடி நடஞ்செய் காட்சி
அவனியிலே இணையில்லா அழகுக் காட்சி!
யார் மணத்திற் கோஇந்தக் கலைகள் சாட்சி?

மென்பசும்புல் மெத்தையிலே அமர்ந்திருந்தே
மேனியிற்பன் னீரலைகள் மோதிச்செல்லத்
தென்றலெனுந் தெவிட்டாத தேனையிந்தத்
திருமணத்து விருந்தாக அருந்திவிட்டேன்!
இன்பவுணர் வெல்லையினை எய்திவிட்டேன்!
இவ்வுலகத் துன்பங்கள் மறந்தேன்; ஆனால்
என்னுளத்தில் மோதுகின்ற வினாவுக்கெல்லாம்
என்ன விடை என்றறியா தேங்குகின்றேன்!

கவிதையிளங் கன்னிக்கா? கானம்பாடும்
காரிகையாள் குயிலுக்கா? உள்ளம் நொந்து
தவிக்கின்ற தாமரைக்கா? குமுதத்திற்கா?
தாவியொரு கொம்பிலமர் பட்சியொன்றென்
செவிகளிலே விழுமாறு விடையைத் தானா
செப்பியது? அதன் மொழியோ புரிவில்லை;
புவியெங்கும் மணமக்கள் தம்மைத்தேடிப்
போகிறதே என்னிதய விமானமம்மா!




"அஞ்ஞான்று எல்லியெழு நாழிப் போதின் வாழ், அழிவரம் பணித்து காலேற்று காலோட்டப்புக் குழி......"

படித்துவிட்டீர்களா? என்ன மொழியாயிருக்குமென விழிக்கிறீர்களா? ஆச்சரியப்படாதீர்கள். இது நமது தமிழ்தான்! அர்த்தம் புரியவில்லையா?

ஆறுமுகநாவலர் ஒருநாள் கடற்கரையில் உலாவிக்கொண்டிருக்கும் பொழுது, குடிசைக்குத் தீ வைத்த ஒருவன் கடற்கரைப்பக்கம் ஓடிவந்தான். அவனைப் பொலீசார் பிடித்து நீதிமன்றத்தின் முன் நிறுத்தினர்கள். ஆறுமுகநாவலரும் அதில் ஒரு சாட்சி.

நீதிபதி ஓர் ஆங்கிலேயர், நாவலருக்கும் ஆங்கிலம் தெரியும். ஆனாலும் நாவலரின் எளிய தோற்றத்தைப் பார்த்த நீதிபதி அவரைத் தமிழிலேயே சாட்சி சொல்லும்படியும் குமாஸ்தா அதைத் தனக்கு ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக்கூறுவார் என்றும் சொன்னார். நீதிபதியன் மமதையை அடக்கவே நாவலர் மேற்கண்டவாறு தனது சாட்சியத்தை ஆரம்பித்தார்.

அதைப் புரிந்துகொள்ளாது மொழி பெயர்ப்பாளர் விழிக்கவே பிறகு நாவலர் அதைப் பேச்சுத் தமிழில் விளக்கினார். "அன்று சூரியன் எழுந்த நான்கு நாழிகை அளவில் கடற்கரை அருகில் காற்றுவாங்கச் சென்றபொழுது" என்று கூறினார்.

∴

சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றுள் நுழைந்த ஒரு வயோதிபர் அங்குள்ளவரிடம் கேட்டார்—

"குரோப் எடுப்பதற்கு எவ்வளவு கூலி?"

"எழுபத்தி ஐந்து சதம்!"

"சேவ் எடுப்பதற்கு...?"

"முப்பது சதம்!"

"சரி என்னுடைய தலையை ஒருக்கால் 'சேவ்' எடுத்துவிடும்"

—இலஸ்ட்ரேட்டட் வீக்லி

∴

இப்பொழுதெல்லாம் சினிமா உலகில் திருட்டுக் கதை வழக்குகள் அமோகமாகக் காணப்படுகின்றன அல்லவா? பத்திரிகைகளில் வெளியாகின்ற கதைகளையும் நாவல்களையும், அவற்றின் ஆசிரியர்களின் அனுமதியின்றித் தம் மனம்போனபடி கூட்டியும் குறைத்தும் வெட்டியும் ஒட்டியும் ஒரு புதுக்கதையாக்கிச் சினிமாவிற்குக் கொடுத்துவிடுகின்றனர் இப்போதைய திரைக்கதை ஆசிரியர்கள் பலர் பழைய பரம்பரையைச் சேர்ந்த டைரக்டர் டி. ஆர். சுந்தரம் இவர்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டவர். பிரபல தமிழ் வார இதழொன்றில் வெளியான ஒரு சின்னஞ்சிறு நகைச்சுவைத் துணுக்கைத் தன் படத்தில் புகுத்து

வதற்கு அவர் விரும்பினர். வார இதழின் ஆசிரியர் அதற்கான அனுமதியையும் கொடுத்துவிட்டார். ஆனால் நகைச்சுவைத் துணுக்கை எழுதியவரின் முகவரியைக் கேட்டறிந்து, அவருடைய பெயருக்கு ஒரு காசோலை அனுப்பிய பின்னரே, அத்துணுக்கைத் தன் பத்தில் சேர்த்துக்கொண்டார் சுந்தரம்!

∴

வாழ்க்கை எப்படி இருக்கிறது என்று சித்தரிப்பதே அது எப்படி இருக்கவேண்டும் என்று காட்டுவதற்காகத்தான்.

—ஜெயகாந்தன்

∴

பட்டு, இறைச்சி போன்ற ஆடம்பரப் பொருட்களுட்படத் தாராளமான உடையும்உணவும் நிரம்பிய உறுதியான பொருளாதாரம்; அரசன் குடிகளைத் தன் பிள்ளைகளைப் போலவும், குடிகள் அரசனைத் தம் பெற்றோரைப் போலவும் கணிக்கும் பண்பு, இளையோர் முதியோருக்கு அடங்கி நடக்கும் நற்குணம்; தந்தை தன் பிள்ளைகளில் அன்புடனும்—கணவன் தன் மனைவியிடம் அன்புடனும் நேர்மையுடனும்—நண்பர்கள் ஒருவர் மேல் ஒருவர் விஸ்வாசமாகவும் நடக்கும் சிறந்த பண்பு; இவையே இலட்சிய சமுதாயத்திற்கு இன்றியமையாதவை. இப்படிக் கூறியது யார் தெரியுமா? சீனப்பேரறிஞராகிய கொன்பியூசியஸ் என்பவர். ஆக்கிரமிப்பும், வன்முறைப் போரும், நம்பிக்கைத் துரோகமுமே வாழும் வழியென்று நினைக்கும் இப்போதைய சீனநாட்டினர், இந்த அறிஞரின் ஆலோசனைகளை ஏற்பார்களா?

∴

அவள்: ஆறறிவற்ற மிருகங்களை நீங்கள் பின்பற்றவேண்டும். சொல்லப்போனால்... தாகமாயிருக்கும் போதுதான் அவை நீர் அருந்தும்.
அவன்: ஆமாம்! அத்தோடு அவை என்றும் பேசுவதேயில்லை!

ஆசிரியர் பொன்னம்பலம்ஒரு கதாப்பிரசங்கத்தில் இதைச் சொன்னர் ''-எனக்குச்சில நூல்கள்தேவைப் பட்டன. எனவே பட்டணத்தில் ஒரு புத்தகக் கடைக்குள் நுழைந்தேன். அங்கே மணிமணியான இலக்கிய நூல்களெல்லாமிருந்தன. அந்தக் கடைக்கெதிரே நடைபாதைக் கடையொன்றை வைத்திருந்தான் ஓர் இளைஞன். அங்கே அழகான சினிமாப் புத்தகங்கள் தொங்கின. அப்போது 'போணி டெயில்' 'ஹை ஹீல் ஷூ' மங்கையொருத்தி போய்க் கொண்டிருந்தாள். உடனே இளைஞன்: 'புதுமைப்பெண்', 'திரும்பிப் பார்', 'நாம்இருவர்,' 'ராஜாராணி', 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை', 'பந்த பாசம்', 'வாழ்க்கை,' எல்லாம் உனக்காக', 'காதல்', 'தென்றல் வீசும்' என்றான். இதுதான் இன்றைய (இலக்கிய) உலகு.

—ந. சத்தியநாதன்
சித்தங்கேணி.

∴

பர்னட் ஷா பெண்களைக் கிண்டல் செய்வதில் வல்லவர். ஒருமுறை அவரும் அவரது மனைவியும், மாதர் சங்கம் ஒன்றில் பேச அழைக்கப்பட்டனர். ஷா பேசும்பொழுது,

''பெண்கள் எப்பொழுதும் புத்தி இல்லாதவர்கள். அவர்கள் சுவர்க்கத்தைத் தேடிச்சென்று நரகத்தைத் தான் கொணடுவருவார்கள். ஆனால் ஆண்களோ அப்படி அல்ல, நரகத்தைத் தேடிச்சென்று சுவர்க்கத்தைக் கொண்டுவருவார்கள்" என்றார்.

அடுத்துப்பேசிய அவர் மனைவி "அவர் பேசியது அத்தனையும் உண்மை. நான் சுவர்க்கத்தைத் தேடிச்சென்று இவரைக் கணவனாக அடைந்தேன். அவர் நரகத்தைத் தேடிச்சென்று என்னை மனைவியாக அடைந்தார்" என்றாள். கைதட்டலுக்குக் கேட்கவும் வேணடுமோ?

# திருக்குறள் மகாநாட்டில்......!

அகில இலங்கைத் தமிழ்மறைக் கழகத்தின் 13வது மாநாடு 11-6-65ல் கிளிநொச்சியில் ஆரம்பமானது. மூன்று தினங்கள் கிளிநொச்சியிலும் தொடர்ந்து பூநகரி, துணுக்காய், கரணவாய் ஆகிய ஊர்களிலும் அடுத் தடுத்து நடாத்தப்பட்டது. ஈழத்துத் தமிழ்கூறு நல்லுலகின் முன்னணி இலக்கியவாதிகள் பலரும் வந்து சிறப்புச்சேர்த்த அவ்விழாக்களில் அன் னூர்கள் தந்த சில சுவைமிக்க கருத்துக்கள்:

**பொன்னூர் மேனியர்**

'தமிழர் கறுப்பர்களா? இல்லை! உழைத்து, உழைத்து வாடி, வதங்கி, நொந்து கறுப்பர்களாக மாறிவிட்டார் கள். முன்னாள் தமிழர் பொன்னூர் மேனியர்! தங்களின் உடலைத்தான் சிவனிலும் கண்டு தேவாரம் செய்தார்கள்

—வித்துவான் க. ந. வேலனூர்

∴ ∴ ∴

**பாராளுமன் றத்திற் கனுப்பு.**

தம் மக்களை அரசசபையின் முன்னணியில் இடம் பெறச் செய்தார்கள் அன்று.

''தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல்"

எனவே நமது கடமை நம் தமிழ்க்குழந்தைகளை பாராளு மன்றத்தில் முன்வரிசைக் கதிரைகளுக்கனுப்புவதே.

—இரசிகமணி கனக செந்திநாதன்

∴ ∴ ∴

**நிலமும் நெல் லும் சோலை யும் மழையும் மாறவில்லை!**

அன்று அரசர்களிருந்தார்கள். குடியாட்சிக்கொள் கைகளையுந்தான் சொன்னூர் வள்ளுவர். இன்றோ 'டிராக் டர்' 'லாரி' என்று இயந்திரங்களெல்லாம் வந்துவிட் டன. ஆனுல் இன்றும் நிலம்மாறவில்லை, நெல்மாற வில்லை, நீர் மாறவில்லை, வயல் மாறவில்லை, பருவம் மாறவில்லை; அன்றுபோல்தானிருக்கின்றன. இதுதான் தெய்வப்புலவர் திருவள்ளுவரின் தத்துவமும்.

—"புதுமைலோலன்"

∴ ∴ ∴

நானும் (தமிழரசுக்கட்சி) என்னுடன் தேர்தலில் போட்டியிட்ட பிரமுகரும் ரயிலில் ஒரே பெட்டியில் பிர யாணம் செய்தோம். எம்மிடையே ஒருவரையொருவர்

**அறமும் அரசியலும்!**

எதிர்த்தோம் என்ற நினைவே நிலவவில்லை. போட்டிக்குப்பின் நாங்கள் கைகுலுக்கிக் கொள்கிறோம். பொது மக்கள்மாத்திரம் ஏன் தேர்தலின்பின் ஜன்மவைரிகளாகி விடவேண்டும். இந்நிலை மாறவேண்டும். அரசியலில் அறத்தையும் தர்மத்தையும் விரைந்து புகுத்தவேண்டும்.

—பண்டிதர். கா. பொ. இரத்தினம்

∴ ∴ ∴

**காதலிக்கக் குறளபடி**

யாரோ ஒரு ஆசிரியை தன்னைக் கடத்திச்சென்றவரிடம் "இது முறையல்ல, பொலீசில்எழுதிவிட்டுச் செல்வோம். பிறகு ஊரில் தவருன பிரசாரம் நடக்காது" என்று சொல்லி அழைத்துச்சென்று பொலீசில் மாட்டிவிட்டாராம். இவர்களெல்லாம் திருக்குறள் படித்தால் இப்படியான நிலையோ, குளம் குட்டைகளை நாடவோ ஏற்படாது, எனவே காதலிப்போரே இன்றே இப்போதே திருக்குறள் வாங்கிவிடுங்கள்.

—பண்டிதர். சீனித்தம்பி

∴ ∴ ∴

**கண்கள் உறங்கவில்லை**

3ம் நாள் விழாவின்பின் யாழ்ப்பாணம் வரும் மெயில் வண்டிக்காக அதிகாலை 3 மணிக்குக் கிளிநொச்சி ரயில் நிலையத்தில் கூடியிருந்தோம. அப்போது 'ஒரு திருவள்ளுவரால் நாம் எத்தனைபேர் நித்திரை விழிக்க வேண்டியிருக்கிறது' என்ருர் ஓர் அன்பர். 'அந்தத் தெய்வப்புலவர் எத்தனைநாள் துயிலிழந்தாரோ?...'' என்ருர் வித்துவான் ஆறுமுகம். "அதைவிடுங்கள் இரத்தினத்தார் எத்தனைநாள் தூங்கவில்லையோ இத்தனை சிறப்பாகச்செய்ய..." என்ருரே கனக. செந்திநாதன்! உடனே வண்டியும் வந்தது எங்களைத் தாலாட்டி யாழ் சேர்க்க.

மு. கனகராசன்.

அடுத்த இதழில்!

**இதயத்தின் பார்வை**

மு. க. ராஜா

**உறவின் நிழல்**

இரா. சிவச்சந்திரன்

இன்னும் பல சிறந்த படைப்புகள் உண்டு.

# பத்தாம் பக்கம் - பத்தாம் பக்கம் - பத்தாம் பக்கம்

கல்யாண வைபவங்களில் வாழ்த்துக்கள் வந்து குவிவதைக் கண்டிருக்கிறோம். சிலர் மனதில் பட்டதை அப்படியே சொல்வது என்று தீர்மானித்துவிட்டால் இப்படியான கடிதங்கள், வாழ்த்துக்களும் வந்து சேருமோ?

1 எத்தனையோ பேர் கல்யாணம் செய்துகொண்டு படும்பாட்டைக் கண்டும் உனது கண்கள் திறக்க வில்லையா?

2 வாழ்க்கை நிறையத் துன்பம் வரும்; தைரியமாகச் சமாளியுங்கள். சில சமயங்களில் இன்பம் வருவதுபோலவும் தோன்றும்; ஏமாந்து விடாதீர்கள்.

3 தங்களுடைய சீட்டாட்டம், குடிப்பழக்கம், சினிமாப்பைத்தியம் ஆகியவற்றை நிறுத்தவல்ல மனோ பலத்தையும் தேகபலத்தையும் தங்கள் புதிய மனைவி பெறப் பிரார்த்தனை.

4 கல்யாணம் செய்ய இருப்பதை அறிந்தேன், கஷ்டத்தைத் தரும் எம்பெருமான் அதைத்தீர்க்கவும் வழிகாட்டுவாராக.

5 எத்தனையோ பேர் கல்யாணம் செய்துகொள்கிறார்கள். நீர் செய்வதுதான் பெரிய புதினமோ? பேப்பரில் போட்டிருக்கிறீரே!

6 மூத்த பெண்ணுக்குத் திருமணம் என்று அறிந்தேன். ஒரு பத்துரூபாவாவது அனுப்புவதுதான் முறையானது. தற்சமயம் பண நெருக்கடி அதிகம். அனேக பெண்களைப்பெற்ற நாங்கள் மனமுவந்து எனக்கு இன்னொரு சந்தர்ப்பம் தர வேண்டும்.

7 இனசன பந்து மித்திரர்களுடன் வந்து தம்பதிகளை ஆசீர்வதிக்கும்படி அழைப்பில் கேட்டிருக்கிறீர்கள் அவர்களில் பலர் நாட்டின் வெவ்வேறு இடங்களிலும் சிலர் சிங்கப்பூர் லண்டன் போன்ற பிற நாடுகளிலும் வசிப்பதால் எல்லோரையும் அழைத்துவர முடியவில்லை அதனால் கல்யாணத்திற்கு வருவதைக் கைவிட்டுவிட்டேன்.

8 கஷ்டங்கள் பல வடிவங்களில் வரலாம். தங்கள் நிலை பயங்கரமானது.

9 தங்கள் புத்திரனது கல்யாணத்தை நிச்சயம் செய்த பெரியோர்கள் அறிவது:- "நீங்கள் விதைக்கும் வினையை நீங்களே அறுக்கவேண்டி வரும்"

10 தந்தியடித்தால் எழுபத்தைந்து சதம் வீணாகுமேயென்று இந்தப் போஸ்ட் காட்டை எழுதுகின்றேன். நான் வாழ்த்தித்தான் நீங்கள் வாழவேண்டும் என்பதில்லை. உங்கள் கடமைக்கு அறிவித்தீர்கள். எனது கடமைக்கு இதை எழுதுகின்றேன்.

# இலங்கை இந்தியர் பிரச்னை தீர......!

-தமிழன் மகன்-

ஆண்டுகள் பல ஓடி மறைந்து விட்டன. தலைவர்கள் பலர் வந்து போய்விட்டார்கள். மகாநாடுகள், பேச்சு வார்த்தைகள் பல நடந்து முடிந்துவிட்டன. எனினும், இலங்கை-இந்தியர் பிரச்னை இன்னமும் தீரவில்லையே! ஏன்?

பிரச்னையைத் தீர்க்க முன்வருபவர்கள், பிரச்னைக்குரியவர்களின் சரியான நிலையைத் தெளிவாக உணரவில்லையா? அரசியல்வாதிகள் இப்பிரச்னையைப் பற்றி விவாதிப்பதை வெறும் பொழுது போக்காகக் கருதுகின்றார்களா? பரிதாபத்திற்குரிய இம்மக்களுக்குக் கிடைத்த தலைவர்கள், தங்களுடைய சுயநலத்திற்காக—தாங்கள் என்றென்றுமே சுகபோக பாக்கியங்களுடன் இருக்க வேண்டும் என்பதற்காக - பிரச்னை தீர்ந்தால் தங்களின் முக்கியத்துவம் அழிந்துவிடும் என்பதற்காகத்—இப்பிரச்னையைத் தீர்க்காது அதை மென்மேலும் சிக்கலாக்கி வருகின்றார்களா?

இதுவரை நடைபெற்ற சம்பவங்களைச் சீர்தூக்கிப் பார்த்தால் மேலேயுள்ள கேள்விகளுக்கு "ஆம்" என்றே பதிலளிக்கத் தோன்றுகின்றது.

உண்மையான இலங்கையன் ஒவ்வொருவனும், இப்பிரச்னை சுமுகமாகவும் விரைவிலும் தீர்க்கப்பட வேண்டும் என்றே விரும்புவான்.

நாம் தேசப்பற்று உடையவர்களாக வாழவேண்டுமானால், நமது தேசத்தின் பொருளாதார அபிவிருத்தியிலும் கவனம் செலுத்த வேண்டும். இப்பிரச்னை சுமுகமான முறையிலே தீர்க்கப்படாவிட்டால், நமது பொருளாதாரத்தின் ஆணிவேரே அறுந்துவிடுமே!

நமது மதத் தலைவர்கள் போதித்ததைப் போல், நாம் மனிதாபிமானத்துடனும் வாழவேண்டும். பனியிலும் மழையிலும், குளிரிலும் கூதலிலும் மலையில் ஏறியும் மடுவில் இறங்கியும் நாளிலும் பொழுதிலும் நம் நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்கிவரும் ஏழைத் தொழிலாளரை நாம் இழிவுபடுத்தலாமா? உழைத்து உழைத்துஇளைத்துவிட்ட அவர்களை உண்டு உண்டுகொழுத்த நாம் ஏறி மிதிக்கலாமா?

பழைய வரலாற்றைச் சற்றுப் புரட்டிப் பார்ப்போம்.

"தூரத்துப் பச்சை கண்களைக் கவரும்" என்பார்கள். இந்தியத் தமிழகத்தில் நொந்து போயிருந்த தமிழர்களை இலங்கைப் 'பச்சை' "இங்கே வா!" என அழைத்தது; ஆபிரிக்கா அழைத்தது; பிஜித் தீவுகளும் அழைத்தன. வஞ்சகமற்ற நெஞ்சுடையவர்கள் "வாழலாம்" என நம்பி எல்லா இடங்களுக்கும் சென்றார்கள்.

வாழ்ந்தார்களா அவர்கள்? வாழவிட்டார்களா அவ்வந்நாட்டினர்?

வாழ்வு என்ற கானலை நோக்கி அவர்கள் செத்துக்கொண்டிருந்தார்கள். அதைத் தடுக்க நினைத்த இந்திய அரசு, வெளி நாடுகளுக்கு இந்தியர் கூலிகளாகச் செல்வதற்கு முற்றுப்புள்ளி வைத்தது.

இந்திய அரசின் நடவடிக்கை இலங்கைத் தோட்ட முதலாளிகளைத்

துடிக்கச் செய்தது. அவர்கள் இலங்கை அரசை வற்புறுத்தி ஒரு தூதுக் குழுவைத் தில்லிக்கு அனுப்பினர்.

"உங்கள் நாட்டு மக்களை எங்கள் நாட்டுக்கு அனுப்புங்கள். அவர்களுக்கு நாம் உணவு கொடுப்போம் உறைவிடம் கொடுப்போம். உடைகள் கொடுப்போம்" உரிமைகள் அனைத்தையும் கொடுப்போம். அவர்கள் தங்கள் உடலுழைப்பை மட்டும் கொடுத்தாற் போதும் என்று மன்றாடினார்கள்.

"இல்லை" என்றுரையா இதயமுடைய இந்தியா, இலங்கைத் தலைவர்களின் சொற்களை நம்பியது. இந்தியத் தொழிலாளர்கள் இலங்கைக்குச் செல்லலாம் என அனுமதியளித்தது.

வலிந்து வரவழைக்கப்பட்ட இம் மக்களின சந்ததியினர்தான் இன்று பிரச்னைக்குரியவர்களாயிருக்கின்றனர்!

இங்குவந்த தொழிலாளர்கள் மாட மாளிகைகளிலும் கூட கோபுரங்களிலுமா வாழ்ந்தார்கள்? பாலும் பழமும் உண்டு பஞ்சணை மெத்தையிலா படுத்தார்கள்? நம் நாட்டுப் பணத்தை மூடை மூடையாகக் கட்டித் தம் நாட்டிற்கா அனுப்பினார்கள்?.

இல்லையே!

அப்படியானால் ஏன் இவர்களுக்கு இன்னல் விளைவிக்கப்படுகின்றது? இவர்கள் ஏன் இளிப்பிற்கும் பழிப்பிற்கும் இலக்காகின்றார்கள்? வீடுமின்றி நாடுமின்றி இவர்கள் ஏன் அனாதைகளாக்கப்பட்டுள்ளனர்?

இதயம் உடையவர்கள், ஏழைத் தொழிலாளர்களில் இரக்கம் உடையவர்கள், இந்நாட்டின் மேம்பாட்டில் அக்கறை உடையவர்கள், இவற்றை நன்கு சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நம் நாட்டுச் செல்வத்தைச் சுரண்டுகிறார்கள் என்பது ஒரு குற்றச் சாட்டு.

இவர்கள் செல்வத்தைச் சுரண்டவில்லை. செழித்து வளர்ந்த ரப்பர் மரங்களைத் தான் சுரண்டுகிறார்கள் அதனால்நாட்டிலே பணம், பாலாகப் பெருகுகின்றது. தேயிலையைக்கிள்ளுகின்றார்கள், தேசம் செழிக்கின்றது.

இந்தியத் தொழிலாளர்களால், இந்நாட்டுத் தொழிலாளர்கள் தம் வேலைவாய்ப்பை இழக்கின்றார்கள் என்பது இன்னொரு குற்றச்சாட்டு.

இவர்கள் உழைக்கப்பிறந்தவர்கள்; உழைப்பதற்கு வந்தவர்கள். வாழ்நாள் முழுவதும் வஞ்சகமற்று உழைக்கத் தயாராயிருப்பவர்கள். இலங்கையர்களால் இவர்களைப் போல் உழைக்கவே முடியாது. தோட்ட முதலாளிகளிடையே வாக்கெடுப்பு நடத்தினால், "இந்தியத் தொழிலாளரே வேண்டும்" என்பதுதான் ஏகோபித்த முடிவாயிருக்கும்.

இந்தியத் தொழிலாளர்களின் இன்றியமையாமையை — அவர்கள் இங்கு வலிந்து வரவழைக்கப்பட்டவர்கள் என்ற உண்மையை—அவர்களுடைய உழைப்பின் காரணமாகச் செழித்த பொருளாதார வளத்தின் அடிப்படையிலேதான் நமது வாழ்க்கை என்னும் மாளிகையே கட்டப்பட்டிருக்கின்றது என்ற பேருண்மையை இந்நாட்டின் ஆட்சிப்பீடத்தினர் உணர்ந்தால், நீதியும் நியாயமும் மனிதாபிமானமும் மிக்க முறை

யிலே இந்தப் பிரச்னை விரைவில் தீர்க்கப்பட்டுவிடும்.

ஆனால்—

இந்த உண்மையை உணர்ந்தவர்களும், சில முக்கியமான அரசியற் காரணங்களுக்காக அந்த உணர்ச்சியை மறைத்துக்கொண்டு தம்மனம் போனபடி பேசித்திரிந்து குட்டையைக் குழப்புகின்றார்கள்.

ஆகவே இந்நாட்டு அரசினர், சாதாரண சூழநிலையில், தாமாக இப் பிரச்னைக்கு முடிவுகாண்பார்கள் என எதிர்பார்க்க முடியாது.

'அசாதாரண'சூழ்நிலை ஒன்றை— ஒரு நெருக்கடியை – பயமுறுத்தலை ஏற்படுத்தினால், பலன் கிடைக்கும்!

பயமுறுத்தல், தார்மீகப் பயமுறுத்தலாக இருக்கவேண்டும்

முதலில்—

கடல்கடந்த தமிழர்களின் வாழ்வில் அக்கறையுடைய–ஏழைத் தொழிலாளர்களை நேரிற்கண்டு அவர்களின் இழிவான நிலையை நெஞ்சால் உணரக்கூடிய – தில்லி அரசினர்க்கு ஆணித்தரமாக எல்லாவற்றையும் எடுத்து விளக்கும் ஆற்றலுடைய– இரு பெருந்தலைவர்களை இங்கே அழைக்கவேண்டும்.

ஒருவர் மதிப்பிற்குரிய மாமேதை ராஜாஜி. மற்றவர் அறிஞர் திலகம் அண்ணா.

இவர்களை அழைத்துச் சென்று தொழிலாளர்களின் பரிதாப நிலையைக் காட்டவேண்டும்.

நேர்மையும் நிதானமுமுடைய இந்த அரசியல் தலைவர்கள் இங்கு வந்து பெறும் நேரடி அனுபவத்துடன் தம் நாவன்மையினால் இந்திய அரசினர்க்கு இடித்துரைப்பார்கள் ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கும்படி இந்திய அரசினர்க்கு எடுத்துரைப்பார்கள்.

அடுத்து—

இந்தியத் தூதுவராக ஒரு தமிழரே இலங்கையில் நியமிக்கப்படவேண்டும். தமிழ்த் தொழிலாளர்களின் நிலைமையை, ஒரு தமிழனாலேயே இதயபூர்வமாக மேலிடத்தினர்க்கு எடுத்துவிளக்க முடியும்.

இவர்களின் தூண்டுதலினால் இந்திய அரசு ஒரு 'தார்மீகப் பயமுறுத்தலை'ச் செய்தால், இலங்கை அரசு பிரச்னையை விரைவாகத் தீர்ப்பதற்கு உண்மையாகவே முயலும்.

நான் கூறியவற்றை,மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர்சங்கம் போன்ற கலாச்சார நிறுவனங்களும் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என விரும்புகின்றேன்.

---


# 3/-

**"கலைச்செல்வி"யின்**
**ஆண்டுச் சந்தா மூன்று ரூபா மட்டுமே.**

# கலைச்செல்வி

**புகையிரதநிலைய வீதி,**
**சுன்னாகம்.**

# தமிழ் விருந்து

விருந்துகளுக்கு நிகழ்ச்சிநிரல் தயாரிப்பது ஒரு தனிக் கலையாகவே மேல்நாட்டில் இருந்துவருகின்றது. மேல்நாட்டுப் பாணியில் இந்நாட்டில் நடைபெறும் விருந்துகளிலும், நகைச்சுவையும் நற்கருத்தும் நிறைந்த நிகழ்ச்சிநிரல்களைச் சிலர் தயாரிக்கின்றனர். வட்டுக்கோட்டையிலுள்ள தமிழ்ச் சங்கத்தினர் அமிர்தலிங்கம் தம்பதிகளுக்கும் கா. பொ. இரத்தினம் தம்பதிகளுக்கும் சென்ற 8–5–65ல் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் முற்றுமுழுக்கத் தமிழ்ப்பாணியில் ஒரு பாராட்டு விருந்து அளித்தனர். தமிழ்ப்பண்பும் தனிச்சுவையும் நிறைந்த முறையில் அவர்கள் தயாரித்த நிகழ்ச்சி விபரங்களை மகிழ்வுடன் வெளியிடுகின்றோம். எதிர்காலத்தில் தமிழ்விருந்து ஏற்பாடுசெய்வோருக்கு இவை பயன்தரலாம்.

## பாராட்டுப் படுத்தல்

"உலகம் உவப்புற"

திரு. இ. பாலசுப்பிரமணியம்

"ஏற்குநர் எழில்பெற"

**திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள்**
உழிஞையாளர்

திரு. மு. சிவானந்தம்
„ கா. வேல்முருகன்

**திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள்**
நொச்சியாளர்

திரு. வி. நவரத்தினம்
,, தா. ஆறுமுகம்

"சங்கம் சால்புற"

திரு. செ. சின்னத்தம்பி
,, க. மயில்வாகனம்

"விருந்தினர் வியன்பெற"

திரு. செ. சீனிவாசகம்
,, ச. சபாபதி

நன்றி நயப்புரை:

ஏற்குநர்கள்:
உழிஞையாளர்
நொச்சியாளர்

புகழ்ந்தனர் பரவல்:

திரு. க. முருகேசன்

## விருந்து விரகு

வாயிலுறல்! இருக்கைகாணல்! உண்டிகொளல்!

### நெய்தற்சுவை:

அமிர்த சில்பதக் காடி, மங்கைக்குத் தமிழ் அரசினும் சிறந்ததாம் முருகானந்தம் முகிழ்க்கும் லிங்கம் ஆய் உண்ணற் பாலது ஐயா.

### குறிஞ்சிச்சுவை:

சிந்தாதமணி மொழிக் காப்பொடு மலைபடு இரத்தினம் தமிழகத்தில் நவ-ரத்தினம் ஆம்; அங்கு ஆறும் முகம் ஆகவிருந்தால் ஆரும் குருஉ வள்ளிக்கவ்வு நுகரலாம்.

### மருதச்சுவை:

தணியாத தீம்பதக்குவை, அசலாம் தீம்புழல்வல்சி. என்னேடி; பின்னும், இனமான தீங்கனிக்கூட்டும், தமிழ் புணர்கூட்டுச் சின்னமாய் எமைத் தம்பித்து மயில் வாமன், கனம்ஆய்த் தருமே.

### முல்லைச்சுவை:

சீனிசேர் பாற்கும்மாயம் பதி புகுந்து சில வாசகம் ஆன முருகு ஏசல் பகரின் பெருமகிழ்வாம் சபா-ஸ்.

---


# சுன்னுகத்தில் சுவாமி சித்தானந்தஜீ

கடந்த 16-6-65 புதன்கிழமை சுவாமி சித்தானந்த மகராஜ் அவர்கள் சுன்னுகத்திற்கு வந்தார்கள். சுன்னுகம் திவ்விய ஜீவன சங்கத்தினர் அளித்த இவ் வரவேற்பில் வர்த்தகர்கள் சுவாமிகளுக்குச் செய்த உபசாரங்கள் வரவேற்பைச் சிறப்புற அமைத்தன. தெருவெங்கும் குழுமி வழிந்த மக்கள் கூட்டத்தைப் பொலீசார் கட்டுப்படுத்தவேண்டியேற்பட்டது. சுவாமிகளை வணங்கி ஆசிபெற எல்லாருமே யத்தனித்தனர். ஆனுல் சனக்கும்பலில் சுவாமிகளை நெருங்கவோ தரையில் விழுந்து ஆசி பெறவோ இயலாது போய்விட்டது. அப்படி விழுந்தவர்கள் ஒருவர் மீதொருவர்தான் விழநேர்ந்ததேயன்றித் தரையைத் தொடமுடியவில்லை. சுவாமி சித்தானந்த மகராஜ் அவர்களின் வருகையால் தங்களின் வர்த்தகப் பட்டினமே புனிதமடைந்தது என சுன்னுகம் வர்த்தகப் பெருமக்கள் பூரிப்படைகின்றனர்.

# வாழ்த்துகின்றோம்!

நாடகத் தாயின் நல்லவொரு பிள்ளையான சினிமா, ஈழத்தைப் பொறுத்தவரையில் இப்போதுதான் பிறந்து சின்னஞ்சிறு குழந்தையாகத் திகழ்கின்றது. இந்தக் குழந்தைக்கு உயிரும் ஊட்டமும் அளித்து பூவும் பொட்டும் புனைந்து, காண்போர் காமுறும் கட்டழகியாக ஆக்க வேண்டும் என்ற ஆர்வம் ஈழத்தின் சிறந்த நடிகர்களுள் ஒருவராகிய அன்பர் அருமைநாயகம் அவர்களின் உள்ளத்தே எழுந்துள்ளது. நண்பர்கள் அந்த ஆர்வத்துக்கு நன்னீரூற்றி வளர்த்து வருகின்றனர். இந்தியத் தமிழகத்திற்குச் சென்று இந்த நவீன கலையின் நெளிவு சுழிவுகளை நன்கு கற்றுக் கொண்டு வரும்படி அவருடைய நண்பர்கள் அவரைவற்புறுத்தியதின் காரணமாக அவர் இப்போது அங்கே செல்ல முடிவு செய்துள்ளார், மன்னிப்பு, மனுநீதிகண்ட சோழன், மூன்றுந்தாரம், யோவான் ஸ்தானகன், போலி அதிகாரி முதலிய நாடகங்களைத் தாமாகவே எழுதியும் சோக்கிரற்றீஸ், மன்னிப்பு, மனுநீதி கண்டசோழன். மூன்றுந் தாரம் யோவான் ஸ்தானகன், போலி அதிகாரி, தேரோட்டி மகன், நல்லதும் கெட்டதும், இன்பநாள். இரத்தக் கண்ணீர், வழி தெரிந்தது, சிங்கப்பூர் அம்மா, மூட்டையர், மணமகன் யாரோ. மனிதன், கொம்மாவனைச் சொல்லாதே, இழந்தகாதல், நால்வர், புடமிட்டபொன், அரிச்சந்திரா, அசோக்குமார், நந்தனார், சேரன் செங்குட்டுவன், இராஜஇராஜ சோழன், ஔவையார்போன்ற நாடகங்களில் நடித்தும், தன் நாடகத் திறமையை வெளிப்படுத்திய அருமைநாயகம் அவர்களை யாழ்ப்பாணத்தின் பலவேறு கலாச்சார நிறுவனங்களும் உள்ளன்போடு வாழ்த்தி வழியனுப்புகின்றனர். இந்தியா சென்று, கலைநுட்பங்கள் அனைத்தையும் கசடறக் கற்று இலங்கை மணித் திருநாட்டில், சினிமாவின் எதிர்காலத்தை ஒளிவீசச் செய்வார் என்ற நம்பிக்கையுடன் "கலைச் செல்வி"யின் சார்பில் நாமும் அவரை வாழ்த்திவழியனுப்பி வைக்கின்றோம்

அருமைநாயகம் அவர்கள் தன் குருநாதராகிய கலையரசு சொர்ணலிங்கம் அவர்களுடன்



# மனக்குரல்

எம். வாமதேவன்

அவள் கடிதம் எழுதியிருக்கிறாள். காதற்கடிதம். அவள் யாரும் எவரும் அல்ல. எனது உறவினள், நெருங்கிய உறவினள்.—முறைப் பெண்ணுங்கூட. தெரிந்தவர்களுக்குத் தெரியும் என்பதால், உறவாகி விடுமா? ஊருக்கும், உலகிற்கும் தெரிந்த 'உறவு' எங்கள் குடும்பத்திற்கிடையே இல்லை. காரணம், சண்டையோ, சச்சரவோ, எதிர்பார்ப்பதைப் போல இல்லை. உறவினர்கள்தாம், ஆனால் உறவை வெளிக்குக் காட்டாதவர்கள். அவள் என்னோடு படித்தவள், என்னைப் பற்றி நன்கு தெரிந்தவள், பழக்கத்தைச் சரடாகக் கொண்டு அல்ல, பார்வையால்தான் எடைபோட்டிருக்க முடியும். அந்தப் பார்வைக்கு அன்று நான் கற்பித்துக் கொண்ட அர்த்தம் வேறு. இன்று அந்தப் பார்வைக்கு இந்தக் கடிதம் உணர்த்துகின்ற அர்த்தம் வேறு.

கடிதம்! வெறும் உணர்ச்சிக் குவியலாக சுத்தா பித்தா என்று இல்லை. நாலாண்டுக் காலத்தில் அவள் சேர்த்துக்கொண்ட அனுபவங்களை, சொல்லத் துடித்த சுந்தர எண்ணங்களை, அவளின் உள்ளக் குமைச்சலையே கடிதத்தின் வசனங்களில், சொற்களில் எழுத்துக்களில் கொட்டியிருக்கிறாள். அவள் கட்டி வளர்த்த, காதல் மகாகோட்டையினைத் தூலமாக, தெளிவுபடுத்தியிருக்கிறாள்.

காதலை, "தூய காதலை, அவளில் காதலுணர்வுகள் அரும்பத் தொடங்கிய காலத்திலேயிருந்து 'என்னொருவனுக்காகவே' சமர்ப்பித்திருக்கிறாள்' ஏற்றுக்கொள்ள நான் தயாராக இல்லை என்றாலும் எதிர்க்கவும் தயாராக இல்லை.

என்னை அவள்......? எனக்குத் தெரியாது. வேறுயாரையாவது......? நிச்சயமாகத் தெரியும், இல்லையென்று. நான்தான் இந்த நாலாண்டு காலமாக, அவளைத் தெரிந்ததிலிருந்து, 'முறைப் பெண்' என்று உணர்ந்ததிலிருந்து அவளை நோயாளியைக் கவனிக்கும் தாதியாகவல்லவா கவனித்து வருகின்றேன். என்னுடைய அவதானிப்பில் எனக்கு நிறைய நம்பிக்கை உண்டு.

'பிறகென்ன? சம்மதித்துவிடு'-திரண்டு உருண்டு கொல்லன் வீட்டு இரும்பாய்க் கிடந்த மனதின் 'பலவீனம்' உம் கொட்டுகின்றது.

இன்றைக்கு நான் கிளார்க். தோட்டத்தில் இரண்டாவது குமாஸ்தா. நீலகிரிப் பகுதியிலே-தன் சுவாத்தியத்திற்காக இந்திய நகரின் பெயரைப் பெற்றுக் கொண்ட நானுஓயாத் தோட்டம் நான் பணியாற்றுமிடம். அட்டன், தொப்பித் தோட்டத்தில் எனது குடும்பம், காலைமுதல் மாலைவரை உடலுழைப்பை நேர்மையாக நல்கி, இப்படித்தான்வாழவேண்டும் என்று தங்களது கிணற்றுத் தவளையின் அறிவில், பொதுப் பழக்கத்தில், வரையறுத்து வாழுகின்ற ஆயிரமாயிரம் குடும்பங்களிலொன்று

நான்கு வருடங்களுக்கு முன்னர், அவளின் குடும்பமும் தந்தையின் தொழில் காரணமாக அங்கே குடி வந்தது.

வந்ததும், கொஞ்சம் தொடுத்துக்கொண்டிருந்த உறவென்னும் கயிற்றின் இழைகள், அற, ஆரம்பித்தன. தூரத்திலேயிருந்தவர்கள் கிட்ட வந்ததும் மகிழ்ந்தேன். ஆனல், தொடர்பைத் தூரம் ஒன்றும் செய்துவிட முடியாது, நினைவு தான் செய்ய முடியும் என்று அறிந்து சில நாட்களிலேயே வருந்த ஆரம்பித்தேன்,

அவளின் குடும்பமும் தொழில் செய்பவர்கள்தாம் என்ருலும், பெற்றவர்களாக, பேணியவர்களாக இருந்தாலும்கூட ஒட்டி உறவாடி கலந்து உறைய, உரையாடாது, நல்லது கெட்டதிற்கு மாத்திரம் சம்பிரதாயமாக ஒரு தலைக்காட்டலைச் செய்துவிட்டு, 'நானும் குடும்பத்தில் ஒருவன் தான்' என்று உணர்த்திவிட்டு ஓடி ஒளிந்து கொள்கின்ற—அப்படித்தான் சொல்ல வேண்டும் — தங்களை யாரென்று காட்டிக்கொள்ளாமல், ரிஷிமூலம் நதி மூலம் சொல்லப்படாததுபோல் தங்களின் மூலத்தைக் கூடியவரைக்கும் மறைத்து வாழுகின்ற, பிரித்தானிய ஏகாதிபத்தியம் ஏற்படுத்தி விட்ட ஒரு வகுப்பைச் சேர்ந்த குடும்பம். அந்த வகுப்பில், அங்கத் தவராய்ச் சேரும்படி எனக்கு விண்ணப்பம் அனுப்பியிருக்கிருள்— இந்தக் கடிதத்தில், காதல் கடிதத்தில்.

"என்னை மருமகனக ஏற்றுக் கொள்ள அவளின் தந்தை தயாராம்." என் வீட்டிற்கு மருமகளாக வர அவள் தயாரா?

என்னைப்பற்றி, என் எண்ணங்கள், நோக்குகள், போக்குகள் பற்றி அவள் நன்கு அறிவாள். நாலாண்டு காலம் ஒரே வகுப்பில் படித்தவர்கள் அல்லவா நாங்கள்? எங்கள் குடும்ப வரலாற்றை, கொஞ்சக் காலத்திற்கு முன்னர் தூசி துடைத்துப் பார்த்தால் ஒரு மரத்தின் இரு கிளைகள். காலம் செய்த சிருஷ்டிக் கோலத்தில் நாங்கள் புள்ளிக் கோலம்; அவர்கள் வரைக்கோலம. புள்ளிகளினுல்தான் வரை உருவாகின்றது, உருவாகும் என்பதை அவர்கள் மறந்து விட்டார்கள் அல்ல, மறுத்து வருகிருர்கள்.

ஒரே தோட்டத்தில்—

அவளின் தந்தை பெரிய கிளார்க், உதவித்துரை. என் தந்தை 'அன்ருடிக்காய்ச்சி;' கூலிக்காரன். இருவரும் 'மச்சினர்கள்' என்ருல் அவரின் தொழிற் பாதுகாப்பிற்குப் பங்கம். சுவர்தானே வேண்டும், சித்திரம் வரைய! ஊரின் வாய்க்கு அஞ்சியதால் இரு குடும்பங்களுக்கிடையே இரும்புத்திரை.

என்னைப் பார்ப்பார், பேசமாட்டார். என் தந்தையிடமும் அப்படித்தான். இதையெல்லாம் புரிந்து கொள்ளப் பள்ளிக்கூடப் படிப்பா தேவை?

தொழிலுக்காக, பாசமும்,


**கலைச்செல்வி**
விற்பனையாளர்,
A.A. சிவசுப்பிரமணியம்
சித்தங்கேணிச்சந்தி,
சித்தங்கேணி.

உறவும் தங்களை மறைத்துக் கொண்டன. மடிந்தும் விட்டன என்றாலும் பொருந்தும்.

அவளை இன்னார் என்று அறிந்து கொண்டதிலிருந்து அவளைப் பார்ப்பேன். அந்தப் பார்வையில் உறவு என்னும் உரிமை. அவள் அதை உணர்ந்து கொண்டதாகவோ காட்டிக்கொண்டதாகவோ இல்லை. பேசியிருக்கிறோம், பள்ளிக்கூடப் பேச்சு. சேமன் இலையில் தண்ணீர் பட்ட மாதிரியான பேச்சு. அந்தப் பேச்சில், நடையில், உடையில் போக்கில், நோக்கில், 'பெரிய இடத்துப் பெண்' ஆக காட்சியளித்தாள். இதற்காக வெறுத்தாலும், பெண்களின் இயற்கை தானே என்று மனதிற்கு ஓர் ஆறுதல். அதனால், அவளை விரும்பினேன், உடைத்துச் சொன்னால், காதலித்தேன்.

அவள், அழகுப் பதுமை, அப்படி இப்படி என்று சொல்ல முடியாவிட்டாலும் ஒத்தவர்களில் முதன்மையானவள்! என்னையும் அடக்கிய மாணவர் குழாத்தின் அழகியல் உணர்வின் மதிப்பீடு இது.

நான் கௌரவமானவன், காதல் அது இது என்று பேசாதவன், அலட்டிக்கொள்ளாதவன்—மற்றவர்களுக்குத்தான்! ஆனால் எனக்கு? நிச்சயமாகச் சொல்கிறேன், என்னைப்பற்றிய உலக அபிப்பிராயம் ஓர் ஏமாற்றுவித்தை. எனது உணர்ச்சிகளை, அவள்மேல் நான் கொண்ட ஆசையை பீறிட்டு எழுந்த காதல் வெள்ளத்தை அடக்கிக்கொண்டேன், உணர்ச்சிகளை அடக்கிக் கொள்வதுபாவம் என்று சொல்லப்பட்டாலுங்கூட.

பலமுறை அவளுக்கு உணர்த்தினேன், அப்பட்டமாக அல்ல, சூசகமாகத்தான். பதில் பேசினாளா? திரும்பித்தான் பார்த்தாளா? இல்லை.

வெறுப்புத் தோன்றவில்லை. விருப்பே பெருகியது. ஊடலிற்தான் காதல் மெருகேறுகிறதோ.

இந்தச் சந்தர்ப்பத்திலே—என் தந்தைக்கு, தாய்க்கு அவளின் தந்தை மூலமாக ஏற்பட்ட புறக்கணிப்பை உணர்ந்தேன், அல்ல அறிந்தேன்.

எங்களையும், அவர்களையும் ஒப்பிட்டுப் பார்த்தது மனம். கிட்டாது எனக்கு. ஔவை சொன்னது போல வெட்டென மறந்துவிட முடியவில்லையே!

மறக்கத்தான்வேண்டும், என்ற நிலை ஏற்பட்டால்...? ஏற்பட்டால் என்ன, ஏற்பட்டேவிட்டது!

என்னுள்ளத்திலே நான் தீட்டிய காதற் சித்திரம், என் பெற்றோர் சுமந்து வந்த பாசமழையால், உருச்சிதைந்தது; சிதைந்தே விட்டது. இப்போது, இக் கடிதப வண்ணத்தையும், தூரிகையையும் சுமந்துவந்திருக்கிறது, புனரமைக்க!

மண்ணிலே மக்கிக் கிடக்கும் மரக்கட்டையா, மீண்டும் ஒளி


**கலைச்செல்வி**

விற்பனையாளர்.

S. கணபதிப்பிள்ளை.

"பிறைட்ஸ்"

மெயின் வீதி,

சங்கானை.

பாய்ச்ச...? என் மனக்கட்டை கருகிப் போனதல்லவா? ஒளி பாய்ச்சும் தன்மை அதற்கேது?

என் காதலைப் புறக்கணித்தமைக்குக் காரணம் காட்டுகின்றாள். காரணம், நியாயமானது, அறிவு பூர்வமானதுங்கூட.

"காதலிலே, என் மனத்தைத் தோயவிட்டிருந்தால், படித்திருப்பேனா? சித்தியெய்தியிருப்பேனா"?

'இல்லை'. அதனால், மடிந்துபோன என் மன உணர்ச்சிகளை மீட்ட வேண்டுமா?

பசிக்குச் சோறிடவேண்டும். அதுவும் நேரமறிந்து இடவேண்டும். பகல் பன்னிரண்டிற்குப் பசிக்கிறது. சோறிடவில்லையென்றால் மணிமூன்றிற்குச் சோறிடமுடியாது. 'பசி' இல்லாமல் போய்விடுகிறது தானே!

எனக்கும் அப்படித்தான். நாலாண்டுகளுக்கு முன்னர் பசித்ததுதான். இப்போது இல்லை. பசியை மீண்டும் கொண்டுவர முடியாது. ஏனென்றால் நான் போக்கிக் கொண்டேன். என்னுள் 'அது' இல்லை. இழந்துவிட்டேன்.

வாழை ஒரு முறைதான் ஈனும். காதலும் அப்படித்தான். அதை ஒரு முறை ஒருவனுக்கோ, அல்லது ஒருத்திக்கோ தான் அர்ப்பணிக்க முடியும்.

நான் இப்போது...... இல்லை. இன்னும் கொஞ்சக்காலத்தில் வேறொருத்தியின் உடைமை.

அவள்......என் மனதின் ஓர் இனிய, தூய நினைவாகவே இருந்து விடட்டும். அதற்கு இந்தக் கடிதம் ஓர் உறுத்தலாக இருக்கட்டும்.


# படிமுறை அட்சர கணிதம்

108 நாட்களுக்குரிய பாடவிதானமும் பயிற்சிகளும் விடைகளுங் கூடியது.

பாடநூற் பிரசுரசபையின் அங்கீகாரம் 1967 டிசம்பர் வரை பெற்றது.

ஆக்கியோன்:

**A. J. ஆசீர்வாதம்** B.Sc. (Lond)

(ஆசிரியர் சம்பத்தாசிரியர் கல்லூரி, யாழ்ப்பாணம்)

6ம் வகுப்புப் படிமுறை அட்சர கணிதம் - 1-60

7ம் வகுப்புப் படிமுறை அட்சர கணிதம் - 1-60

உங்கள் பிரதிகளுக்கு:

**ஆசீர்வாதம்**

**அச்சகம் சக புத்தகசாலை**

**32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: 274

# பிரசவம்

-வள்ளி மணாளன்-

அன்று நிகழ்ந்த நிகழ்ச்சி யொன்று என் எண்ணத்தோடு கலந்துஉறவாடியதால் என்னுள்ளே 'கரு'வொன்று உருவாகின்றது.

அந்தக் 'கரு' என்னுள்ளே கிடந்து, இன்று பிரச விக்க எத்தனிக்கின்றது. பிரசவத் தின் எத்தனிப்பில் 'உத்திகளின்' நெரிப்பும் வேதனையும்.

அன்று வளர்ந்த 'கரு' இன்று கதையாகப் பிறந்திருக்கின்றது. கதையின் உற்பத்தியில் பிரசவத்தின் நோ கெடுகின்றது. நான் நோவை யும்பொருட்படுத்தாதுகுழந்தையைப் புரட்டிப் பார்க்கின்றேன். குழந்தை என் முதற்பிரசவம். மகிழ்ச்சி என் தேகமெங்கிலும் வியாபித்தோடிக் கரைகிறது.

எனக்குப்பெலன் இல்லாததால் பிள்ளையின் எடை குறைவென்கிறார் கள் விமர்சன வைத்தியர்கள். பிள் ளையின் தாய்க்கு நல்ல எதிர்கால மென்கிறார்கள், விமர்சனச் சோதி டர்கள். பிள்ளை அழகில்லை என்கிறார் கள் சிலர். பிள்ளையின் முகம் வேறு யாரோஒருஉருவத்தைப்போல்இருக் கிறதாகக் கூறித்தம்முகத்தைச் சுழிக் கின்றனர் சிலர். என்னவோ, எது வாகிலும் நான் இதைப் பிரசவிக்க உள்ள வேதனையை யார் அறிவார் கள்? பிள்ளையைப்பெறுபவர்களுக்குத் தான் தெரியும் அந்நோவின் தன் மை - அதுவும் கன்னிப் பிள்ளை பெறுபவர்களுக்கு! அந்தக் 'கரு' மனத்திற்குள் இருது படுத்தியபாடு? நீங்கள் 'கரு' வுற்றால்தான் தெரியும். ஆனால் அதற்கும் ஒரு 'விருப்பம்' வேண்டும். அதற்குமுன் 'பக்குவ மடைய வேண்டும்.

நான் மலடியல்ல என்பது தெளிவாகிவிட்டது. இன்னும் எத்த னையோ பிரசவிப்பேன். எனக்கு இன் னும் பெலன் இருக்கின்றது. ஆனால் நான் பிரசவிப்பதில்எத்தனைவாழும், எத்தனை இறக்கும் என்பது என் னாற்சொல்ல முடியாது. ஏனெனில் என்னையே கொன்றுவிடும் விமர்சன வைத்தியர்களும் சோதிடர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். நானே இறந்து விட்டால், பின்பு பிரசவம்?

---

நமது கண்டி நகர விற்பனையாளர்

முஸ்லிம் ஹோட்டல்

தலதா வீதி : : கண்டி.

# எடை

-இ. இராசரத்தினம்-

முதர்த்துச் சடைத்து வளர்ந்திருக்கின்றது ஒருசெடி. அதன் மேனியெங்கும் குத்திட்டு நிற்கின்றன கூரியமுட்கள்.

மனிதன் ஒருவனது பார்வை தற்செயலாக அந்தச்செடியின் மீது விழுகின்றது. அவனது மனதில் இப்படியொரு எண்ணச்சுழிப்பு: "இது உலகத்திற்குப் பயன்படாதசெடி. தன்னால் மற்றவர்களுக்கு உதவமுடியாவிட்டாலும், தன்பாட்டில் அடுத்தவர்களுக்குத் தீங்கிழைக்காமல் வாழவேண்டும். ஆனல் இந்தச்செடியால் மற்றவர்களுக்கு உதவவும் முடியாது. தீங்கிழைக்காமல் வாழவும் முடியாது"

மனிதனது மனதில் முளையிட்ட எண்ணம் 'செயல்' என்ற முளையில் வந்து தரித்தபோது,-

அவன் தன்னை நினைத்துப் பெருமைப்பட்டான். ஆம்! அதற்கும் காரணமிருக்கிறது.

"உலகத்திற்குத் தீங்கிழைக்கும் இந்த முள்ளுச்செடியைப் பிடுங்கி எறிவதினல், நான் ஒரு வழியில் உலகத்திற்கு உதவி செய்தவனுவேன்."

தனது பெருமைக்கு அவன் கற்பித்துக் கொண்ட காரணம் இதுதான்!

சில நாட்களுக்குப் பிறகு ஒரு நோயாளி வந்து, தன் பார்வையை நிலத்தில் படரவிட்டு, சிறு புல் பூண்டுகளுக்கிடையே எதையோ தேடினன்.

அவன் தேடியது தனது உடலிலுள்ள தீராத நோயைத் தீர்ப்பதற்கு வைத்தியனல் சிபார்சு செய்யப்பட்ட மூலிகை—சஞ்சீவி! பல மணி நேரமாகத்தேடியும் கிடைக்காததினல், ஏமாற்றத்துடன் வீடு திரும்ப நினைத்து நெஞ்சை நிமிர்த்தியபோது,—

அவனது பார்வை சற்றுத் தூரத்துக்கப்பால் ஒரு குறிப்பிட்ட இடத்தில் விழுந்து நிலைகுத்தி நிற்கின்றது.

கிட்டப்போய்ப் பார்க்கின்றான். அதுதான் அவன் தேடிய சஞ்சீவிச் செடி. ஆனல் அது இப்போது அவனுக்குப்பயன்படாது காய்ந்து கருகிக் கிடக்கின்றதே!

"எத்தனையோ ஆயிரமாயிரம் வேறு செடிகள் இருக்க, இந்த அருமருந்தாகிய சஞ்சீவிச் செடியை மட்டும் தனித்துப் பிடுங்கி எறிந்துவிட்டானே யாரோ படுபாவி" என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டே ஏமாற்றத்துடன் நடக்கின்றான் நோயாளி.

இந்தவார்த்தை, காய்ந்து கருகிக் கிடக்கும் சஞ்சீவிச் செடிக்குக் கேட்டும், கேளாததுபோலஅது நித்தியமௌனத்தில் மூள்கிக் கிடக்கின்றது.

# றிச்சேட் கிழவன்

இளம் பிள்ளைகள் ஒழுங்காக இருக்கவேண்டும் என்பதற்காக அவன் அவர்களைப் பயமுறுத்தினன். அவர்கள் நடுநடுங்கினர்கள். ஆனல் எதிர்பார்த்த நன்மை ஏற்பட்டதா...?

## பொ. சண்முகநாதன்

றிச்சேட் கிழவனைக் கண்டாலே அந்த ஊர்ப் பிள்ளைகளுக்கெல்லாம் குலை நடுக்கம் உண்டாகும். காரணம் அவன் குடல் எடுக்கும் றிச்சேட் கிழவன்!

நடுத்தர உயரம் பருமனுடன் நீண்ட வெண் தாடி மீசையும் கொண்ட றிச்சேட் கிழவனுக்கு முன் தலையில் உச்சிவரை மயிர் கிடையாது பின் பகுதியிலும் காதுப்பாகங்களில் தான் இலேசான வெண்மயிர்க் கற்றைகள் உண்டு. காக்கி மேல் சட்டையுடன் முழங்காலுக்குச் சற்று இறக்கமாக சிவப்பு அல்லது பச்சை நிறத்தில் நாலு முழவேட்டி கட்டிக் கொள்வான். அடிக்கடி கிழவனின் ஒரு கை தாடியைத் தடவிவிட்டபடி இருக்கும். மறுகை கைத்தடியைச் சுழற்றியபடி இருக்கும். சட்டைப் பையிலே ஒரு நீண்ட கத்தியை மடக்கியபடி வைத்திருப்பான். அது குடல் எடுக்கும் கத்தி!

ஏதோ ஓர் அரசாங்க வேலையில் இருந்த றிச்சேட் கிழவன் இப்பொழுது ஓய்வுபெற்று விட்டான். ஓய்வு பெற்ற நாளிலிருந்து அவன் அந்த ஊரிலேயே சுற்றித் திரிந்து வருகிருன். காலையில் வீட்டைவிட்டு வெளிக்கிளம்பினுல் அனேகமாக மாலையில்தான் தனது வீட்டிற்குள் நுழைவான். அத்தனை நேரமும் அந்த ஊர் ஆரம்பப் பாடசாலை, சங்கக்கடை தெருவீதி எல்லாம் சுற்றித் திரிவான்.

எந்த வீட்டிற்குள்ளும் அழையா விருந்தினனுக நுழைவான். ஊர்ப் புதினங்களெல்லாம் பேசுவான். எங்கும் எதிர்ப்புக்கிடையாது. "ஐயா ஐயா சாமி சாமி' என்ற வரவேற்பே எங்கும் கிடைக்கும்.

அந்த ஆரம்பப் பாடசாலையின் ஓர் அங்கம் என்றே அவனைச் சொல்லலாம். எந்த நாளும் பாடசாலைக்கு வருவான். நீண்டநேரம் 'பெரிய' வாத்தியாரோடு பேசி விட்டுப் போவான்.

முரண்டு பிடிக்கும் பிள்ளைகளுக்கு 'றிச்சேட் கிழவன் வருகிருன்". "றிச்சேட் கிழவனிடம் பிடித்துக் கொடுத்து விடுவேன்" என்றெல்லாம் சொல்லிப் பெற்ரேர்கள் பயங்காட்டுவார்கள். பிள்ளைகளும் உடனே 'கப் சிப்' என்று அடங்கிவிடுவார்கள்.

பள்ளிக்கூடத்திலும், "பெரிய வாத்தியார் றிச்சேட் கிழவனிடம் பிடித்துக் கொடுத்துவிடுவார்" என்று பிள்ளைகள் எல்லாம் மிகுந்த கவனமாக இருப்பார்கள்.

அன்று மணி அந்தப் பாடசாலைக்கு முதல் முதலாக வந்த போது றிச்சேட் கிழவனைப் பற்றி முன் பின் கேள்விப்படாதிருந்த போதுமே அவனைக் கண்டதும் மிகவும் பயந்துபோய் விட்டான்.

அன்றுதான் பாடசாலையைப்

பார்ப்பதற்காக பாடசாலைப் பரிசோதகரும் வருவதாக இருந்தது.

பரிசோதகர் வரும்போது எப்படி 'நமஸ்காரம்'சொல்லவேண்டும் என்பதை மாணவர்களுக்கு, றிச்சேட் கிழவனின் வருகையை வைத்து வாத்திமார்கள் படிப்பித்தார்கள். கிழவன் வந்து மூன்ருவது படியில் கால்வைத்ததும் மாணவர்கள் எல்லாரும் ஏககாலத்தில் எழுந்து 'நமஸ்காரம்' சொன்ஞர்கள். அப்படிச் சொல்லாவிட்டால் றிச்சேட் கிழவன் குடல் எடுத்துப்போடுவான் என்ற பயம் அவர்களுக்கு!

பரிசோதகர் வந்தபோதும் மாணவர்கள் அப்படியே ஏககாலத்தில் எழுந்து 'நமஸ்காரம்' சொன்ஞர்கள். இல்லாவிட்டால் பெரிய வாத்தியார் றிச்சேட் கிழவனிடம் சொல்லிக் குடல் எடுப்பித்துப் போடுவாரே!

றிச்சேட் கிழவனைக் கண்டது முதல் மணிக்கு மிகவும் பயம் வந்துவிட்டது. அவனது தோற்றம் ... அவனது உருளும் பெரிய விழிகள் அவை மனிதர்களை உற்றுப்பார்க்கும் வகை...தாடியை வருடும் ஒருகை... தடியைச் சுற்றும் மறுகை... பின் பயமாயிராதா? அதுவும் சிறுவன் மணிக்கு!

பரிசோதகர் போனதும் முதல் முதலாக பக்கத்திலிருந்தசிவபாலன் என்ற மாணவனிடம் மணி விசாரிக்கத் தொடங்கினுன்,

''யார்டா அந்தக் கிழவன்? மூதேசியைப் பார்க்கவே சரியான பயமாயிருக்கே?"

''உஸ் சத்தம்போட்டுப் பேசாதையடா, நீ உப்புடிப் பேசினது அறிந்தாலே உன்னைச் சாக்கொண்டு போடுவான். அவ்வளவு பொல்லாதவன்'' என்று மெதுவாகச் சொன்னுன் சிவபாலன்.

''அட அவ்வளவு பொல்லாதவனு? நான் அப்பவே நினைத்தேன். அப்படி அவன் என்னுதான் செய்வானும்?"

''குழப்படி செய்தால், பள்ளிக்கூடத்துக்குக் கள்ளம் படுத்திஞல் வாத்திமார் பிடித்து அவனிடம் கொடுத்து விடுவார்கள். அவன் குடல் எடுத்துவிடுவான்"

"அதென்னடா அது குடல் என்ருல்?"

''குடலென்ருல் இன்னும் தெரியாதா? கோழி உரிக்கேக்கை நீ பாக்கிறதில்லையா? அப்போது ஒரு பாம்பு மாதிரி வருமே, அது போல எங்கடை வயித்துக்கையும் ஒரு பெரிய குடல் இருக்காம். அதை அவன் எடுத்துப் போடுவான். குடலை எடுத்தால் பிறகு நாங்கள் இருக்க ஏலாது. செத்துப் போடுவம்''

''குடலை எப்படியாம் எடுக்கிறது? அவன் எப்படியாம் எடுப்பான்?''

''அவன்ரை பையுக்கை ஒரு வில்லுக்கத்தி இருக்கு. யாரையன் பயப்புடுத்தைக்கைபார் அவன் கத்தியை விரித்துக் காட்டுவான். அந்தக் கத்தியாலை வயித்திலை ஒரு கீறு கீறிப்போட்டு அதுக்காலை கையை ஓட்டி குடலைப் பிடித்து ஒரு இழுவை இழுத்தான் என்ருல் குடல் முழுவதும் வெளியாலை வந்திடும்"

மணி வாய்விட்டுஅழாததுதான் குறை. அவனுக்குப் பொல்லதா

பயம் வந்துவிட்டது. ஏன் பழைய பள்ளிக்கூடத்தை விட்டு இந்தப் பள்ளிக்கூடத்துக்கு வந்தோம் என்றிருந்தது. பாடசாலை முடிவடையும் நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

பாடசாலையிலிருந்து வந்ததும் வராததுமாகச்சாப்பாட்டுக் கோப்பை முன் அமர்ந்த மணி தாயாரிடம் தனதுதுயரத்தை இலேசாக வெளியிட்டான்.

''அம்மா இந்தப் பள்ளிக்கூடம் ஒரு சதத்துக்கும் உதவாதம்மா. ஓலைக் கொட்டில். ஆக ஐந்து வாத்திமார்தான் இருக்கினம். ஐந்தாம் வகுப்புக்கு மேலை வகுப்புகள் இல்லை அந்தஅருமையான பள்ளிக்கூடத்தை விட்டுவிட்டு இதிலை ஏனம்மா என்னைச் சேர்த்தனீங்கள்?"

சிவக்கொழுந்துவுக்குதனதுமகன் ஏன் முதல் நாளிலேயே அந்தப் பள்ளிக்கூடத்தை வெறுக்கிறான், பழைய பள்ளிக்கூடத்தையே விரும்புகிறான் என்பதெல்லாம் ஒன்றும் புரியவில்லை. எனவே ''அப்பாவுக்கு வேலை மாறினதாலை இப்ப இது தான் எங்களுக்கு வுசதியாயிருக்கு நீ ஐஞ்சாம் வகுப்புக்கு மேலைஇல்லை என்று கவலைப்படாதை. ஐஞ்சு பாஸ் பண்ணினப்பிறகு வேறு பெரிய பள்ளிக்கூடத்திலை சேர்த்துவிடலாம்" என்றாள்.

"அதுமட்டுமில்லை அம்மா முந்தின பள்ளிக்கூடத்திலை இரண்டாம் வகுப்பிலை படிப்பிக்கிறதுதான் இஞ்சை மூண்டாம் வகுப்பிலை படிப்பிக்கினம், அதோடை பாடங்களும் வலு குறைவு"

''அதுதான் நல்லது தம்பி அப்படியெண்டால் நீ ஒவ்வொரு முறையும் முதலாம் பிள்ளையாய் வரலாம், இல்லையா?''

'குரங்கு பிடிக்கப்போய் பிள்ளையாராய் முடிந்த' கதைபோல் என்னவோ சொல்லுவதற்காகப் போட்ட அத்திவாரம் எப்படியோ மாறிப் போனதைக் கண்ட மணி தான் சொல்லவந்ததை நேரடியாகவே சொல்லத் தொடங்கினான்.

''அம்மா! இந்தப் பள்ளிக்கூடத்திலை ஒரு கிழட்டு மூதேசி அடிக்கடி வருமாம். அதை இண்டைக்கு நானும் கண்டனான். மூதேசியைப் பார்த்தாலே பொல்லாத பயமாயிருக்கும். அதோடை அது ஆக்களுக்கும் குடல்- எடுக்கிறதாம்!"

சிவக்கொழுந்துவுக்குத் தனது மகன் இவ்வளவு நேரமும் எதற்காகப் பீடிகை போட்டான் என்ற காரணம் இப்பொழுதுதான் புரிந்தது. ''தம்பி! அந்தக் கிழவன் சும்மா இருக்கிறவர்களை ஒண்டும் செய்யான். குழப்படி செய்கிறவர்களுக்குத்தான் குடல் எடுப்பான்" என்றாள்.

## மாணவ, மாணவிகளே!

ஆனி 1965 தொடக்கம் மார்கழி 1965 வரையுமுள்ள ''கலைச்செல்வி'' இதழ்களைப் பாதுகாப்பாக வைத்திருங்கள். விபரம் பின்னர் வெளியாகும்.

# தமிழால் முடியும்!

-சபா. ஜெயராசா-

பலநாட்டு நல்லறிஞர் கருத்துத் தேனும்
பொலிந்தபெரு அறிவியலின் நுணுக்கச்சீரும்
நிலைநாட்டத் தமிழகத்திற் கிளம்பிநிற்கும்
நல்லறிஞர் துணிவுக்கு வாழ்த்துச்சொல்வோம்!

எத்தகைய அறிவியலின் நுணுக்கமேனும்
எடுத்துரைக்க எந்தமிழால் முடியுமிப்போ!
நித்திரையும் நீங்கியது நிலவுகாணபோம்-
நீண்டபெரு நூல்கள் இனித் தொடரல்வேண்டும்!
அறிவியலைக் கற்றற்குத் தமிழுண்டென்று
அந்நியரும் வந்தோடிக் கற்றல்வேண்டும்!
நெறியான புத்தறிவுக் கலைகட்கெல்லாம்
நம்மொழியே தாயாக விளங்கல் வேண்டும்!

"நான் குழப்படி செய்யமாட்டான்தானம்மா. எண்டாலும் தற்செயலாகத் தெரியாமல் செய்து போட்டா என்ன செய்கிறது? குழப்படி செய்யாமல் உலகத்திலை யார் இருக்கினம்? மகாத்மா காந்தி கூட சில வேளைகளில் தவறு செய்திருக்கிறாராம் அம்மா!"

சிவக்கொழுந்து, தன் மகன் நிச்சேட் கிழவனுக்குப் பயப்படுவது ஒருவகையில் நல்லதுஎன்று உணர்ந்தாள். ஆதலால் மகனுக்குக் கிழவனிடமுள்ள பயத்தை முற்றாகப் போக்க விரும்பவில்லை. எனவே "அப்படி எப்பாலும் இருந்திட்டுச் சிலவேளை குழப்படி செய்தால் ஒன்றும் நடவாது" என்று சொன்னாள்.

"இங்கை நின்று ஒன்றும் நடவாது என்றால் போதுமா? குடல் எடுத்தாப் பிறகு என்னத்தைச் செய்ய முடியும்? எப்படி என்றாலும் இந்தப் பள்ளிக்கூடத்துக்கு நான் இனிப் போகவே மாட்டேன்" என்றபடி சாப்பிட்டது பாதி சாப்பிடாதது பாதியாக எழுந்து போய் விட்டான் மணி. அவனை என்ன பாடுபட்டும் தாயாரால் சமாதானப்படுத்த முடியவில்லை.

அடுத்தநாள் பாடசாலைக்குப் போக மறுத்து மணி தாயாரிடம் எவ்வளவோ முரண்டு பிடித்தான். அழுது அழுது அடம் பிடித்தான். அவன் பாடசாலைக்குப் போவதாகவே காணேம். இறுதியில் "நீ அழுது தொலை நான் பள்ளிக்கூடத்துச்குச் சொல்லி அனுப்பி நிச்சேட் கிழவனை வரக்காட்டி விடுகிறன்" என்றாள் சிவக்கொழுந்து.

அதன்பிறகு மணி பாடசாலையை நோக்கிக் கண்ணீரைத்துடைத்தபடி ஓடிவிட்டான்.

பாடசாலை தொடங்கிவிட்டது.

பாடசாலையில் நிச்சேட் கிழவன் வந்ததும் பெரிய வாத்தியார் பாடசாலைக்கு ஒழுங்காக வராத ஒரு மாணவனைப் பிடித்து கிழவனுக்கு முன் நிறுத்தினர்.

மாணவன் பயத்தால் நடுநடுங்கிக்கொண்டிருந்தான். மணி உட்பட பாடசாலை மாணவர்கள் எல்லாருமே

பயம் கலந்த அமைதியுடன் அதைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

மாணவனைச் 'சுண்'டிப் பார்த்த நிச்சேட் கிழவன் ''நல்ல பதமான பொடியன் தான்'' என்ருன்.

மாணவனுக்குக் கை கால்கள் எல்லாம் உதறலெடுத்தன. மணிக்கும் அதே நிலைதான்!

கிழவன் கையிலிருந்த கத்தியை எடுத்து விரித்தான். பளபளத்தது கத்தி!

வீரிட்டு அலறினன் மாணவன். மணியும்கூட அமைதியாகக் கண்ணீர் விட்டான்.

கிழவன் மாணவனைப் பிடித்து ''இன்றுமட்டும் விட்டுவிடுகிறேன் இனிமேல் பள்ளிக்குக் கள்ளம் படுத்தினயோ'' என்று பற்களை நெரித்துக் கறுவிக் கொண்டான்.

''இனி ஒரு நாளுமே கள்ளம் படுத்த மாட்டன்'' என்று பையன் கிழவனிடம் அழுதழுது விழுந்து வணங்காத குறையாக மன்ருடினன்.

கிழவனின் கை தளர்ந்தது. கத்தி மடக்கப்பட்டுச் சட்டைப் பைக்குள் தஞ்சமடைந்தது.

இந்தச் சம்பவத்தின் பின் மணியின் பயம் இன்னும் ஒரு படி அதிகரித்தது. நிக்சேட் கிழவனின் தோற்றமும் அவனது பளபளக்கும் கத்தியும் மணியின் மனத்திரையில் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தன. தான் விஞடிக்கு விஞடி ஏதோ ஒரு பயங்கர உலகத்தை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாக அவன் உணரத் தலைப்பட்டான். அன்றைய பாடங்கள் ஒன்றும் அவனது காதில் ஏறவில்லை.

மூன்ரும் நாளும் தாயாரிடம் முரண்டு பிடித்தான் மணி. ஆரம்பத்தில் அழாத குறையாக மன்ருடிப் பார்த்தான். அது பயனில்லாமற் போகவே அழத் தொடங்கினன். ''நான் இந்தப் பள்ளிக்கூடத்துக்கு போகவில்லை'' என்ருன்.

சிவக்கொழுந்து நேற்றுச் சொன்னது போலவே ''நீ அழுது தொலை. நான் பள்ளிக்கூடத்துக்குச் சொல்லி அனுப்பி நிச்சேட் கிழவனை வரக்காட்டி விடுகிறேன்'' என்ருள். ஆனல்—

மணி நேற்றுப்போல் இன்று அடங்கிவிடவில்லை. அவனுக்கு உள்ளூரப் பயமே என்ருலும் அதைத் தாயாரிடம் காட்டிக்கொள்ளவில்லை. மிஞ்சி மிஞ்சிப் போனல் ஒரு வேளை பணிந்துவிட மாட்டாளா என்ற நப்பாசை அவனுக்கு!

மணி மீண்டும் மீண்டும் அழுதழுது அடம்பிடித்தான். ''நான் செத்தாலும் இந்தப் பள்ளிக்கூடத்துக்கு இனிமேல் போகமாட்டேன்'' என்ருன்.

இந்த நேரத்தில் ''யாரது அங்கை அழுகிறது? குடல் எடுக்க வாறதா?'' என்றவாறு படலைதிறந்து நிச்சேட் கிழவன் வீட்டுக்கு வரவே


**கலைச்செல்வி**

விற்பனையாளர்


K. குருநாதன்

முருகன் ஸ்டோர்ஸ்,

சட்டநாதர் வீதி ; நல்லூர்

## நம் நாட்டு வாசகர்

எழுத்து புனிதமானது! அந்தப் புனிதம உயர்ந்த கருத்துக்களையும் நீதியையும் போதிப்பதாயிருக்க வேண்டும். ராஜாஜி லக்ஷ்மி போன்ருரது கதைகள் எனக்குப் பிடிக்கும். பொதுவாகவே சாதாரண மக்களின் முன்னேற்றம் கருதி அவர்களையும்



முு. காந்திமதி
சென்மேரிக் கல்லூரி. மத்துகம

மொழியையும் வளர்க்கும் எந்த சஞ்சிகைகளையும் நான் விட்டுவைப்தேயில்லை!

குமுதம்! எனக்குப் பிடித்த ஒரே பத்திரிகை! சின்னச் சின்ன, ஆனல் சுவைமிக்க விஷயங்கள். அப்படித் தருவதனல்த்தான் அதில் இல்லாத விஷயங்களே இல்லை என்ருகிவிட்டது. இலக்கியமா? சரித்திரமா? விஞ்ஞானமா? சமயமா? சினிமாவா? நகைச்சுவையா? விளையாட்டா? நாவலா? “சிறு”கதையா? வைத்தியமா? அரசியலா? பொழுதுபோக்கா? எதுவேண்டும்?...? என்ன தான் இல்லை குமுதத்தில்? “சோட் அன்ட் சுவீட்” என்பார்களே அப்படி! தொடர்ந்து நான்கு குமுதம் வாசித்தால் போதும். பொதுவாக எல்லாம் எமக்குத் தேவையான அளவு அறிந்து கொள்ளலாம்.

எதிலும் புதுமைவேண்டும். குமுதம் என்ருலும் புதுமை என்றல்லவா ஆகிக்கொண்டு வருகிறது! இதைவிட வேறென்ன வேண்டும் ஒரு சஞ்சிகைக்கு ஒரு வாசகனைக் கவர? என்ன சொல்லுங்களேன்!

“வேண்டாம் சாமி. அவன் பள்ளிக்குப் போருனும். இனிமேல் குழப்படி செய்ய மாட்டானும்” என்ருள் சிவக்கொழுந்து. மணி—?

அவன் றிச்சேட் கிழவனின் கண்ணில் படாமல் ஓட்டமும் நடையுமாகப் பாடசாலைக்கு ஓடிவிட்டான்

பாடசாலை தொடங்கி மூன்ரும் பாடம் நடந்து கொண்டிருந்தது. அடுத்த பாடம் கணக்குப் பாடம். நேற்றுப் புதுக்கணக்குப் படிப்பித்ததும் அதில் வீட்டுக் கணக்குகள் கொடுக்கப்பட்டதும் இப்பொழுது சிவபாலன் சொல்லித்தான் மணிக்குத் தெரியவந்தது.

அவனுக்கு நெஞ்சு பக் பக்கென்று அடித்துக் கொண்டது. தன்னை நோக்கி ஆபத்து மிக அண்மையிலே வந்துவிட்டதை உணர்ந்தான். தனது குடலை றிச்சேட் கிழவனின் பளபளக்கும் கத்தி பதம் பார்ப்பது இன்னும் ஒரு மணித்தியாலத்திற்குள்கூட நடந்துவிடலாம் என்று எண்ணினுன்.

அதற்கிடையில் மின்வெட்டும் நேரத்தில் அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது.

“வாத்தியார், ஒண்டுக்கு?”

“சரி போய் வா!”

மலசல கூடங்கள் இருந்த பாடசாலையின் எல்லைக்குப் போன

மணி சுற்றும் முற்றும் பார்த்தான். வேலித் துவாரத்தால் நுழைந்து தெருவுக்கு வந்துவிட்டான. வீட்டை நோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்ருன். சங்கக்கடை இருந்த சந்தியில் திரும்பியதும்—

"ஐயோ..."

நிச்சேட் கிழவன் வந்துவிட்டான். மணி மூர்ச்சையானுன்.

மணிக்கு கடந்த மூன்று தினங்களாகக் கடுமையான காய்ச்சல். அரைத் தூக்கத்தில் 'அதோ நிச்சாட் கிழவன் வருகிருன்,' 'ஐயோ கத்தியை விரிக்கிருன்;' ஐயோ வயிற்றைக் கீறுகிருன்' என்றெல்லாம் அரற்றிக் கொண்டிருந்தான்.

சிவக்கொழுந்துவிற்கு மணியின் காய்ச்சலுக்கான காரணம்புரிந்து விடடது. நிச்சேட் கிழவனைப்பற்றிய பீதியை அகற்றுவதற்கு எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. அவன் மனதில் ஏற்கனவேயே நிச்சேட் கிழவனைப் பற்றிய பயம் ஆழமாக உறைந்துவிட்டது.

'நிச்கேட் கிழவனல் மட்டுமே மணியின் பயத்தைப் போக்கமுடியும்' என்று கருதிய சிவக்கொழுந்து எப்படியும் நிச்சேட் கிழவனிடம் விவரங்களைக் கூறி அவனை அழைத்து வரும்படி தனது கணவனை அனுப்பினுள்.

தனக்கு மணி எவ்வளவு தூரம் பயந்திருக்கிருன்? அதனல் அவனுக்கு இத்தனை விபரீதம் ஏற்பட்டுவிட்டதே! என்று கவலையுடன் எண்ணிய நிச்சேட் கிழவன் அன்று சங்கக்கடைச் சந்தியில் நடைபெற்ற சம்பவத்திற்குப் பின் இன்று வரை அவனைப் பார்க்கக்கூடப் போக முடியவில்லை. தன்னைக் கண்டால் இன்னும் என்னென்ன நடைபெறுமோ என்று கிழவனுக்குப் பயம்.

மணியின் படுக்கையருகே திடீரென்று நிச்சேட் கிழவன் தோன்றவே மீண்டும் அவன் பயந்துவிட்டான் "ஐயோ என்னை ஒன்றும் செய்யாதீர்கள். நான் இனிமேல் ஒரு குழப்படியும் செய்யமாட்டேன் தற்செயலாகத் தெரியாமல் ஒரு குற்றம் செய்தால் மன்னிக்கக் கூடாதா? மகாத்மா காந்திகூட தவறு செய்திருக்கிருராமே!' என்று அழத்தொடங்கினுன்.

கிழவன் அமைதியான புன்னகை ஒன்றை வரவழைத்துக் கொண்டு "தம்பி! நான் ஒன்றும் செய்யமாட்டேன். நீர் பயப்படாதையும். நான் ஒருவருக்குமே ஒன்றும் செய்யமாட்டேன்" என்ருன்.

"இல்லை! நீங்கள் பச்சைப்பொய் சொல்லுறீங்கள். நீங்கள் குழப்படி செய்யிறவங்களுக்குக் குடல் எடுக்கிறனீங்கள். இனிமேல் நான் ஒரு குற்றமும் செய்யமாட்டேன். இண்டைக்கு மட்டும் என்னை விட்டுவிடுங்கோ" என்று மணி மீண்டும் அழுதான்.

"தம்பி! என்னைக் குடல் எடுக்கிறவன் எண்டு எல்லாரும் சொல்லுகினம்தான். நானும் குடல் எடுக்கிறதாகச் சொல்லுவதுண்டுதான். இதெல்லாம் பொடியளைப் பயப்புடுத்துவதற்காகவேசொல்லுவேன் உண்மையில் நான் அப்படிச்செய்வதில்லை இதுவரை நான்யாருக்காவது குடல் எடுத்ததை நீ பார்த்திருக்கிருயா? அப்படி நான் உண்மையில் யாருக்

காவது குடல் எடுத்ததாக யாராவது சொல்லியாவது நீ கேட்டிருக்கிருயா? உனது பள்ளிக்கூடச் சிநேகிதர்களை யாவதுகேட்டுப்பார். நான் யாருக்காவது குடல் எடுத்ததைப் பார்த்திருக்கிருர்களா? அல்லது கேட்டுத்தான் இருக்கிருர்களா? என்பதை!"

மணி யோசித்தான். றிச்சேட் கிழவன் சொல்வது அவனுக்கு உண்மை போலத் தோன்றியது. கிழவன் 'குடல் எடுப்பான்' என்று கேள்விப்பட்டிருந்தானே தவிர கிழவன் 'குடல் எடுத்ததை' அவன் காணவுமில்லை. கேள்விப்படவுமில்லை. அவனின் பயம் சிறிது நீங்கியதும் துணிவாகவே கிழவனிடம் கேட்டான்.

"அப்படியென்ருல் அந்தக் கத்தி உங்களுக்கு என்னத்திற்காகவாம்?"

"கத்தி வெறும் பயம் காட்டுவதற்கு மட்டுமே! நான் உண்மையிலேயே 'குடல் எடுக்கக்கூடியவன்'என்பதைப் பொடியள் நம்பவேண்டும். அப்பொழுதுதான் பொயடிள் ஒழுங்காக நடப்பார்கள் என்பதால்தான் இப்படியெல்லாம் செய்தேன். உங்கள் பெரிய வாத்தியாரும் இவ்விடத்துப் பெரியவர்களும்கூட நான் இப்படித் திரிவது நல்லது என்று அடிக்கடி சொல்லுவார்கள். 'பயம் இருந்தால்தான் பிள்ளைகள் நல்லாய் வருவார்கள்' என்பார்கள். ஆனுல் நீ எனக்குப் பயந்து இப்படியானதைப் பார்த்தபின் நானும் இனி மாறப் போகிறேன். நான் இனி உனக்கு மட்டுமல்ல எல்லாருக்குமே நல்லவன்தான்! இன்றுமுதல் நான் குடல் எடுக்கும் றிச்சேட் கிழவனல்ல; வெறும் றிச்சேட் கிழவனேதான்! என்றவாறு தனது பையிலுள்ள கத்தியை எடுத்து மூலையில் எறிந்துவிட்டுப் போனுன்.

அடுத்த நாள் றிச்சேட் கிழவனின் கரத்தைப் பற்றியவாறு குதூகலத்துடன் பாடசாலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த மணியைக் கண்டதும் அந்த ஊரே ஆச்சரியப்பட்டது.


# மாணவர்கள் தேவை

கல்லூரிகள், பாடசாலைகளில் "கலைச்செல்வி"யை விற்பனை செய்வதற்கு மாணவ-விற்பனையாளர் தேவை. பிரதி ஒன்றுக்கு 5சதம் கழிவு கொடுக்கப்படும். ஒவ்வொரு கல்லூரிக்கும் ஒவ்வொரு மாணவ விற்பனையாளரே நியமிக்கப்படுவர். ஆர்வமுடையோர், தங்களுடைய பெயர், வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி ஆகியவற்றைத் தெளிவாக எழுதி, எத்தனை பிரதிகள் தேவை என்பதைற் குறிப்பிட்டு தலைமையாசிரியரின் கையெழுத்துடன் எமக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

தம் கல்வியைப் பாதிக்காதவகையில், சிறியளவில் மாணவர்கள் பணம் சம்பாதிப்பதற்கு இத்திட்டம் வழிவகுக்கும்

விநியோக அதிபர்:

**கலைச்செல்வி**

**சுன்னுகம்**

# வரையறை!

**ஆண்களுக்கு உதவி செய்து, அந்த உதவியையே வாழ்வாக்கியவள், தன்னளவில் தேய்ந்துகொண்டிருந்தாள். அவளுடைய ஆத்மா மலர்ச்சியுற்று ஞானோதயம் ஏற்பட்டதா? எப்போது?**

முனியப்பதாசன்

படலையை அடிக்கொருதரம் திறந்து வீதியை எட்டி எட்டிப் பார்க்கிறாள் புவனம்.

யாரைப் பார்க்கிறாளோ இந்த வேளை கெட்ட வேளையில்? அயலிலும் சுற்றுப்புறத்திலும் இரவு இரவாய், அவள் தன் உடலை விற்பதற்காய் எவர் எவரையோ பார்த்த படியே நிற்பதாகத்தான் சொல்லுகிறார்கள். அதை அறிந்து விட வேண்டுமென்ற உந்தலில் இரவு பகலாய் மனம் கிடந்து தவித்துக் கொள்ள, எப்படியும் ஊர்வதந்தியின் உள்ளே புகுந்து நின்ற மனதின் தவிப்பை நசுக்கிவிடத்தான் வேளைகெட்ட வேளையில் நானும் அவளையும், அந்த வளவையும் பார்த்தபடியே எனது வீட்டுக் கோடியறையின் யன்னலைப் பிடித்தபடி நிற்கிறேன்.

நிலவு ஒரு சுகத்தோடு அந்த வளவில் விழுந்து புரண்டு கொண்டிருக்கிறது. கிணற்றோரத்தே செழுமையுடன் ஓங்கிநின்ற வாழையிலைகளிலே நிலவின் கதிர்கள் படுகிறபோதெல்லாம், மெல்லிய காற்றசைப்பில் அவை இலேசாய் ஆடுகிறபோதெல்லாம், சலனமற்ற நீர்ப் பரப்பில் மிதக்கும் நங்கூரம் பாய்ச்சிய வத்தைகள் மெது மெதுவாய் இடைக்கிடையே எற்றும் நீரலைப்பில் ஆடுகிறாற்போலத் தெரிகின்றன. ஓங்கி நிமிர்ந்து நின்ற பொன்மயமான குருத்துக்களிலே நிலவு தோய்கிறபோதெல்லாம் தங்கக் கம்பியையே நீட்டி நிமிர்த்திச் சொருகியிருக்கிறாற்போலப் படுகின்றன. தெற்குப் புறத்தே வீதியை ஒட்டிக்கிடுகு வேலிக்குக் கொஞ்சம் தள்ளி உட்புறமாய் சிமெண்டு பதித்து நாட்டப்பட்ட வயிரவ சூலத்தின் மேல் உதிர்ந்து கிடந்த வாடிய திருவாத்திமலர்கள் கூட, நல்லவைகள் அழிகிறபோதும் பிரகாசமாகத்தான் இருக்கும் என்கிறாற்போல ஒரு உண்மையை உணர்த்த முனைகின்றன. அதனை அடுத்து ஓங்கிக்கிளைகளை நீட்டிப் பரந்திருந்த திருவாத்தி மரம் மௌன பாஷையில் சிரித்துச் சிரித்துக் குளிர்ச்சியாய்ப் பேசிக்கொண்டிருக்கிறது.

வளவின் மத்தியில் புவனம் வாழும் ஓலைக்கொட்டில். நிலவில் அதுதான் எவ்வளவு அழகாய்த்தெரிகிறது!

நேரம் பன்னிரண்டு மணிக்கு மேலாகத்தான் இருக்கும். ஒரு மணியிருக்கலாமா? நிச்சயமாய்ச் சொல்லிக்கொள்ள முடியவில்லை.

இப்போதும் அவள் படலையண்டை நின்று பார்க்கிறாள்.

அவளை இப்போது நன்றாக உற்றுப் பார்த்தேன். அத்துணைவாளிப்பான உடல் அல்ல, கவிதா கூர்

சொல்லுகிறுற்போல 'ஆணின் கற்பனைகளின் உருவமே பெண்' என்று அவளைப்பார்த்தால் சொல்லத் தோன்றவில்லை. மொத்தமாய் மிக மிகக் கள்ளமாய், நஞ்சுத்தனத்தையும் வெறித்தனத்தையும் பொதுக்கி நெஞ்சில் வைத்தபடியே எடை போடுகிற ஆண்வர்க்கப் பிரதிநிதிகள் மனதிலே பார்த்தவுடனே நெஞ்சைப் பற்றிக்கொள்ளவோ, அனுபவித்து விடவோ தூண்டுகிற போதையோ, அழகோஎதுவும் அவள் தோற்றத்தில் இல்லை. நமது கவிகள் 'பரிபூரணமான அழகு கும்பிடத் தூண்டும்' என்கிறுற்போலவும் அவள் தோற்றம் உணர்த்தவில்லை.

சதைப்பிடிப்புக் கன்னக் கதுப்புக்களிலே வற்றியிருக்கிறது. நயனங்களிலேஏதோஒரு திருப்தி. சுத்தமாய், பரிபூரண சுத்தமாய் இந்த மண்ணில் கால்பாவிநிற்கிற துறவிக்குக்கூட ஏற்படாத ஒரு திருப்தி. வெறுமை மட்டும் மின்னுகிறது. மஞ்சள் ரவிக்கையும், மஞ்சள் பாவாடையோடும்தான் நிற்கிருள்.

சோர்ந்துபோய் அவள் திண்ணையில் உட்காருகிறபோதே, படலையண்டை நின்றபடியே யாரோ ஒருவன் குரல் கொடுக்கிருன். அந்தக் குரல் அவளை இயக்கத் துள்ளியபடியே படலையண்டை ஓடுகிருள். குரல்கொடுத்தவன் மெதுவாய் வருகிருன். அவன் உள்பதற்றத்தின் துள்ளலும் விசும்பலும் உடம்பிலே பட்டுத் தெறிக்கத்தான் தெறிக்கிறது. அவன் கண்கள் நேரடியாய் அவளைப் பார்க்கவேயில்லை. அங்கும் இங்கும், இங்கும் அங்குமாய்த் தொட்டும் தொடாமலும் மேயும் வெள்ளாட்டைப்போல அவன் கண்கள் சுழலுகின்றன. அவை பட்ட இடத்தின் தோற்றப் பொலிவு எதுவுமே நயனத்தின் வாயிலாய்ப் புகுந்து உள்ளத்தைத் தொட்டு முகத்தில் எண்ண அலைக்கீற்றை உருவாக்கவில்லை.

அவள் கண்களில், குரல் கேட்டு ஓடிவருகிறபோது காணப்பட்ட குளிர்ச்சியில்லை. ஏமாற்றமே தெரிந்தது. அந்த ஏமாற்றத்திலும் ஏதோ விபரிக்கமுடியாத திருப்தியின் பூச்சு.

நெடு நேரமாய் அந்த மௌன பாஷை பேசப்படுகிறது. அது மௌன பாஷையா? பிரபஞ்சத் தொட்டிலில் எங்குமாய் எவையுமாய் இயற்கையின் சிறு துகள்கள்–துகள்கள், உயிர்கள் — பேருயிர்கள் பேசுகிற மௌன பாஷையா? உயிரின் வழியே புகுந்து ஜீவனை உலுப்பிப்பொலியச் செய்யும் மௌன பாஷையா? இது வேறு; முற்றும் வேறுதான். பார்த்தால்தான் அப் பட்டமாய்த் தெரிகிறதே? அவன் புதிதுதானா. யாருக்கு இவளுக்கோ? அல்லது தன்னை, தன் ஆத்மாவை இழக்கிறதற்கே புதிதுதானு? என்னமோ? புதிதுதான், அந்தப் பயமும், குழப்பமும், நடுக்கமும், மகிழ்ச்சியும் சுழற்சியும்...?

அணுவிலிருந்து பேரணு வரையும் இயக்கும் சங்கமத்தின் சாயல்களை யாருக்கேனும்கற்பிக்கிருர்களா? புதிது பழையதாய்விடபழையதே புதிதாய்- புதிதே பழையதாய் மாறிவிடுகிறதே?

இப்போது அவர்கள் இல்லை.
உள்ளே, ஓலைக் கொட்டிலின் உள்ளேதான் அவர்கள். தூங்குகிருர்களா? விழித்திருக்கிருர்களா?

அழிகிறார்களா? மலருகிறார்களா? எதைச் சொல்ல? ஆத்மா விழித்த படியே தூங்குவதில்லையா? தேய்கிறதில்லையா? அழிகிறதில்லையா? ஆத்மா அழிகிறதா? இல்லை. அது எடுத்த உடம்பு அதன் நேரடிப் பார்வையிலேயே தேய்கிறதே?

ஊரின் வதந்தி நினைவைத் தொட்டது.

கிராமப்புறத்து வயல்களிலே அவள் வளர்ந்தவள். மண்ணின் அற்புதமான பாஷை பயிர்களிடையே பேசுகிறபோது தெளிவாய்க் கேட்டவள். விரிவானம் மாறி மாறி மாறி உதிர்க்கும் சங்கதிகளைக் கன்னி கழியாக் குமரிப் பருவத்தில் செவி மடுத்தவள். நாற்று நடுகிறபோது, களை பிடுங்குகிறபோது—அரிவு வெட்டுகிறபோது, தேய்ந்தும் அழிந்தும் பிறந்தவள்.

அவள் இருதயமும் ஒரு நாள் காதலைப் பாடிற்று கட்டற்ற பிரபஞ்சத் தொகுதியில் அவள் தேய்ந்தும் அழிந்தும் உயிர்த்த இடங்களிலே கட்டற்ற தன்மையுடன் மண்ணும் நிலமும் வானும் மீனும் பேசியதைத் தான் அவளும் பேசினள். பாவம். அவை வாழ்க்கையில்லை என்கிற சங்கதியை அவளுக்கு உணர்த்த யாரும் இருந்துவிடவில்லை பேதைப் பெண். அரிவு வெட்டுகிற செந்தியாக்காரனோடு ஓடிவந்தாள். விழுந்தவள் சுத்தமான நயவஞ்சக நகர்ப் புறத்து மண்ணிலே விழுந்தாள் எழுந்திருக்க அவளால் முடியவில்லை தூக்கி நிறுத்தவும் அவளைக் கூட்டி வந்தவன் இல்லை. அவன் யாருடன் ஓடினனோ?

இயற்கை போதித்த சமாச்சாரத்தை அவள் இப்போதுதான் கண்டாள். வாழ்க்கை மண்ணோடு ஒட்டிய மனிதர்களோடு வாழுகிறது. மண்ணிலேதான், ஆனால் மண்ணின் தாய்மை நிறைவோடு, களங்கமற்ற புனிதத் தன்மையோடு அல்ல என்கிற சங்கதியை அவள் உணர்ந்து கொண்டாள்.

பிறகு அரிவு வெட்டவும் களை பிடுங்கவும், நாற்றுநடவும் நகர்ப் புறத்திலே வேலை இருக்கிறதா? வயிறு மட்டும் சும்மா இருந்துவிடுகிறதா? பசித்தது.

பெரிய இடத்து மனிதர்களின் வீடுகளிலே நெல்லுக் குத்திக் கொடுத்தாள் மா இடித்தாள். மிளகாய்த் தூள் இடித்தாள். கூலி? அது மிகவும் மோசமாகத்தான் இருந்தது அந்த வீடுகளிலே இருக்கிற பெரிய தனம் படைத்த பெரிய பொடியன்கள் 'கூலி' கொடுக்கத் தயாராக இருந்தார்கள்.

உருளத் தொடங்கிய கல் உருளத்தான் செய்கிறது. தடுத்து நிறுத்துவதற்கு நகர்ப்புறத்தில் நல்ல மனதுகள் ஏதாவது இருக்கிறதா? அவள் உருளத் தொடங்கிவிட்டாள்.

பிறகு...பிறகு என்ன? எல்லாமே அதுதானே? தேய்வும். அழிவும் பிறப்பும்—உயிர்ப்பும்...எல்லாமே அதுதானே?

சடுதியாய் என் கண்கள் படலையண்டை நோக்குகின்றன.

அவளைப் பார்க்கிறபோது ஏதோ ஒரு வகை வெறுப்பு நெஞ்சில் முட்டி மோதுகிறது. ஆண்டுக்கணக்காய்க் கண்ட முகம். நாளும் பொழுதுமாய்த் தூற்றப்பட்ட உருவம்.

அவளைப் பார்த்துக்கொண்டிருக்கிறபோது எத்தனையோ அவலமான பெண்ணின் கதைகள் - கன்னிகழியாப் பெண்ணின் கதைகள் அலை அலையாய் உள்ளத்தில் எழுகின்றன. கண்களில் நீர் முட்டுகிறது. ஆணை நம்பி நம்பித் தேய்ந்து போகிற இந்த நிர்மூடமான பெண்களின் கூட்டம் இருக்கிறதே அவர்களுக்கு எதிலேதான் நிறைவுஇருக்கிறதோ? வெறியர்கள், நெஞ்சிலும், நாவிலும் முகத்திலும் வலை வீசுவதற்குச் சாமர்த்தியங்களைத் தெய்வம் கொடுத்திருக்கிறபோது, கூசாமல் கொடுத்திருக்கிறபோது அவர்கள் என்னதான் செய்ய முடியுமோ?

இயற்கையின் பலவீனமே அதுதானோ? புரியத்தான் இல்லை. புரியவேயில்லை. உயிரின் பிறப்பின் முன்னால் சின்னதும் பெரிதுமாய் அறிவும் அறிவற்றதுமான பெண் வர்க்கம் - ஆடோ, மாடோ, கோழியோ, நாயோ, மனிதப் பெண்ணோ? எவ்வளவு தேய்ந்து போகின்றனர்? அந்தத் தேய்வைப் பயன்படுத்தி இறுமாந்து நிற்கிற ஆண்கழுகுகள் –மிருகஜாதிக் கழுகுகள்......? அது அவர்களது வெற்றியா? தேய்வா? புரியத்தான் இல்லை.

''புவனம்''

''புவனம்''

''புவனம்''

குரலிற்கு ஈடுஇல்லை. வெகு நேரம் வெகுநேரமாகிவிட்டது. அங்கும் இங்குமாய் வந்தவன் வெறிக்கப் பார்த்தபடியே நிற்கிறான். உள்ளக் கொதிப்பின் வெம்மை அவன் உடம்பில் பிறப்பித்த நடுக்கத்தின் சூடு தெள்ளத் தெளிவாய் தெரிகிறது. கைகளைப் பிசைகிறதும் பற்களை நற நற வென்று கடிக்கிறதும் கையையும் காலையும் ஆட்டுகிறதும்...இரத்தச் சிவப்பாய் மாறிவிட்ட கண்களோ?

சோர்ந்து போய் அவர்கள் வருகின்றனர்.

புதிதாய் வந்தவன் முந்தி வந்தவனை வெறிக்க நோக்குகிறான். பளீர் என்று பாய்ந்து அறை விழுகிறது. அவன் ஓடுகிறான். அது ஓட்டமா?

அவன் நிமிர்ந்து அவளை வெறிக்கப் பார்க்கிறான். அவளோ நடுங்கியபடியே நிற்கிறாள்.

'புவனம்'

அவள் பேசவில்லை

''நாய், திமிர் பிடித்த கழுதை'' அவள் குரல் வளையை நெரித்தபடியே அவன் கத்துகிறான்.

''உனக்குக் கற்பிருக்கிறதாடீ நாயே? எனக்குச் சம்மதம் சொல்லி நேரங் காட்டி வரச் சொல்லிப் போட்டு இன்னொருத்தனோடை கூடிக் குலவிறியே? நாயே உனக்கு கற்பிருக்கிறதாடீ''


அவள் தேய்ந்து கொண்டிருக்கிறாள், இல்லை அவள் மலர்ந்து கொண்டிருக்கிறாள். முந்தி அவள் தேய்ந்துகொண்டிருந்தாள். அந்தத் தேய்வில் அவள் ஆத்மா மலரவில்லை. குரல்வளையை நெரித்தபடியே கிடைக்கிற உடம்பின் தேய்வில் ஆத்மா விழிப்புற்று வெளியே போய் வேறு உடம்பில் அடைபடத் தொடங்குகிறதோ? இது தேய்வா? மலர்ச்சியா?

அந்த மலர்ச்சிக்கு அறிகுறியாய் அவள் திமிறிப் பிடியில் சோருகிறாள்.

அவள் இதழ்கள் சிரமப்பட்டு அசைகின்றன.

'பெண்ணின் கற்பிற்கு மொத்தமாய் இந்த ஆண் வர்க்கம் கொடுக்கிற வரையறை இதுதானே... 'நேரம் காட்டி...உனக்குக் கற்பிருக்கிறதாடீ...நாயே?'

அவன் ஓடிவிட்டான்.




அக்கரையூர் ஆதம்,

அக்கரைப்பற்று.

கே; யோவ்! உன்னைக் கனவுல அங்கொடையில் கண்டேனே?

ப: ஏய்யா ஒரு டாக்டரை நோயாளி கனவுல காணக்கூடாதென்று சட்டம் ஏதாவது இருக்குதாய்யா? என்னைக் கனவுலகாணுவதைப்பற்றி எனக்கு ஆட்சேபம் இல்லை. உம்முடைய நோய் பூரணமாகக் குணமடைந்தால் போதும்!

ஐ. முருகையா, மயிலணி.

கே: ''காதலுக்குக் கண்ணில்லை'' என்பது ஆன்றோர் வாக்கு. இது சாத்தியமாகுமா?

ப: நமது ஊனக் கண்ணால், புற அழகை மட்டுமே பார்க்க முடியும். போலியிலும் பகட்டிலும் நாம் மயங்குவதற்கு ஊனக் கண்ணே காரணம். உண்மைக் காதல் இதயத்தை இதயம் உணர்வதனால், ஏற்படுவது. அந்தத் தூய காதலுக்குக் கண் அவசியமேயில்லை!

M. A. றஷீத், கல்முனை.

கே: தேர்தற் காலத்தில்தோல்வியுற்ற அபேட்சகர் ஒருவர் மீண்டும் உளறித் திரிவது எதற்காக?

ப: தேர்தற்காலத்தில் நாளொன்றிற்குப் பதினைந்து, இருபது மேடைகளில் உளறிக் கொட்டிப் பழகியிருப்பார். தேர்தல் முடிந்த பின்பும் அந்தப் பழக்கம் தொடர்கின்றது போலும்! பழகிய பழக்கத்தை இலகுவில் விட்டுவிட முடியுமா?

கா. சதானந்தசர்மா, கந்தரோடை

கே: இப்போது ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்?

ப: பிரதமராகுவேன் எனத் தான் காணும் (பகற்) கனவெல்லாம் விரைவிலே பலித்துவிடும்என்று சொல்லி சுதந்திரக் கட்சியின் வெடிப்புகளை மறைக்க முயன்றுகொண்டிருக்கிறார்.

கா. இளங்கோ, சங்கானை.

கே: நேர்மையின் பிறப்பிடமாகிய தந்தையிடம் தவறுதலாகப் பிழைவிடும் தம்பிமார்கள் ஒரு காலத்தில்......

ப: தறிகெட்டு, நிலைகெட்டுத் தடக்கி விழுந்து மண்ணோடு மண்ணாகி மக்களால் மிதிக்கப்படுவார்கள்!

செ. ஆனந்தராசா, ஏழாலை.

கே: இலக்கியத்திலிருந்து இலக்கணம் வந்ததா? இலக்கணத்திலிருந்து இலக்கியம் வந்ததா?

ப: இலக்கியத்திலிருந்துதான் இலக்கணம் வந்தது. இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் கூறல் என்பதைக் கேள்விப்படவில்லையா? "சாமுத்திரிகா இலட்சண"த்தை வைத்துக்கொண்டு மனிதனைப் படைக்கவில்லை. மனிதன் தோன்றிய பின்னரே "சாமுத்திரிகா இலட்சணம்" உருவானது!

சீ. இலட்சுமிகாந்தன், ஏழாலை

கே: ஈழத்துச் சௌந்தரராஜனுக்கும் இந்திய சௌந்தரராஜனுக்குமுள்ள வேறுபாடு என்ன?

ப: பெயரிலுள்ள ஒற்றுமையைத் தவிர, வேறெதையும் நான் காணவில்லையே! கணேஷன் என்று பெயர் வைப்பதினால் மட்டும் ஒருவர் நடிகர்திலகமாகிவிட முடியுமா?


கி. சிவராஜன், வண்ணார்பண்ணை.

கே: "கலைச்செல்வி"யால் எழுத்துலகில் அறிமுகமான ஒருசிலர் இப்போது 'கலைச்செல்வி"யைப்பற்றி இழிவாகப் பேசித் திரிகின்றார்களே!

ப: இப்படி ஒரு சிலராவது இருக்காவிட்டால், "வளர்த்த கடா மார்பிலே பாய்தல்" என்றதொடர் பலருக்கு மறந்து விடுமே! ஆனால் 'கலைச்செல்வி" இத்தகையோரைப் பற்றி இம்மியும் கவலைப்படமாட்டாள். "பணிபுரி; பலனை எதிர்பாராதே" என்பதுதான் அவளின் இலட்சியம்!

S S. தேவர், கந்தகெதரை பதுளை.

கே: சிவாஜி கணேஷனின் முகவரி என்ன? அவருக்குக் கடிதம் எழுதினால் மறுமொழி அனுப்புவாரா?



ப: நடிகர் திலகத்திற்கு அனுப்பப்படும் கடிதங்களை அவருடைய சகோதரர் சண்முகம் உடைத்துப் பார்த்து, ஒரு சில கடிதங்களை மட்டுமே அவரிடம் கொடுப்பார். அந்தக் கடிதங்களுள், பதிலெழுத வேண்டியவற்றிற்கு மட்டும் சிவாஜி பதில் எழுதுவார். கிடைக்கும் எல்

லாக் கடிதங்களுக்கும் பதில் எழுது வதானால், அதற்கெனத் தனியாக ஒரு அலுவலகமும் பத்துப்பதினைந்து ''ஸ்டெனோ"க்களும் தேவைப்படுமே! என்றாலும், ''அன்னை இல்லம்", போக்ஸ்ரோடு, சென்னை என்ற முகவரிக்கு எழுதிப் பாருங்கள். தங்களுக்கு அதிர்ஷ்டம் இருந்தால், பதில் கிடைக்கும்!

''இறைநேசன்", கொழும்பு-14

கே: உருவகக் கதை எழுத விழையும் இளம் எழுத்தாளர் களுக்கு நீங்கள் கூறும் குறிப் புரைகள் என்ன?

ப: ஈழத்து எழுத்தாளர் சு. வே அவர்கள் அருமையான பல உரு வகக் கதைகளை எழுதியுள்ளார்கள். பழைய ஈழகேசரி, அல்லி, ''ஆனந் தன்'' இதழ்களில் அவற்றைப் படிக் கலாம். ரஹ்மான் எழுதிய ''மரபு'' தொகுதியிலும், விந்தனின் ''குட்டிக் கதைகள்'' என்ற நூலிலும் நல்ல கதைகள் உள்ளன. இந்தக் கதைகளை ஊன்றிப் படியுங்கள். உருவகக் கதைகளின் உருவம், அமைப்பு முதலியவை தெளிவாகத் தெரியும். அவற்றைப் பின்பற்றித் தாங்களும் எழுதலாம்!

எஸ் கே. சபா, அ. மி. பாடசாலை, வல்வெட்டித்துறை.

கே: தமிழ்த் தாய்மார்கள் தங்கள் சேய்களுக்கு ஊட்டும் பாலோடு தமிழ்ச் சுவையையும் சேர்த்து ஊட்டுவதை எங்காவது பார்த்திருக் கிறீர்களா?

ப; ஆயா இல்லாத வீடுகளில் புட்டிப்பால் வாங்காத வீடுகளில் கணவனுக்குப் பணிபுரிவதே கடமை

## திருக்குறள் கீர்த்தனை-21

ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவல் துணிவு.

ராகம்: செஞ்சுருட்டி — தாளம்: ஆதி

பல்லவி

அறிவு தரும் நூல்கள் துறவுபூணும் ஒழுக்க
நெறியுடையோரைத் துணிவுடன் போற்றிடும்

அனுபல்லவி

அறியாமையை நீக்கி அறம் வளர்த்தொழுகிப்
பிறவித் துன்பங்களைய பிற ஆசைதவிர்ப்பாரை

சரணம்

அகத்திலும் புறத்திலும் ஆசைகளை ஒழித்து
ஆத்மிக ஞானததை அனுபவித்து வளர்த்து
இகத்திலும் பரத்திலும் இன்பமாய் இருப்போரை
செகத்திலும் விழுமிய பெருமையுடன் மதித்து.

—யாழ்ப்பாணம் ந. வீரமணி

என்ற உணர்வுடன் வீட்டோடு இருக்கும் தமிழ்ப் பெண்கள், தம் பிள்ளைகளுக்குத் தமிழ்ச் சுவையையும் புகட்டுவதைக் கேட்டிருக்கிறேனே!

சி. கனகாம்பிகை, கல்வியங்காடு

கே: இப்பொழுது இலங்கை இசைக் கலைஞர்களில் முதலிடம் வகிப்பவர் யார்?

ப: இக்கேள்விக்கு முடிவான தீர்ப்புக் கூறுவதற்கு, நான் சங்கீத விமர்சகன் அல்லன். மஹாராஜபுரம் சந்தானம், இசைப்புலவர் சண்முகரத்தினம் ஆகியோரின் குரலிசையும் N. K பத்மநாதனின் நாதஸ்வர இசையும் எனக்கு மிகவும் பிடிக்கும். என்பதைத்தான் என்னால் கூற முடியும்!

உ. தருமலிங்கம்,
64, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்

கே: நடிகையர் திலகம் சாவித்திரியின் அசையா நடிப்புத்திறமை பாராட்டத்தக்கதா?

ப: அவர் ஏதாவது படத்தில் பொம்மையாக வருகின்றாரா, என்ன அவருடைய 'அசையா' நடிப்பைப் பாராட்டுவதற்கு?

உ. சுப்பிரமணியம்,
64, ஸ்டான்லிவீதி, யாழ்ப்பாணம்.

கே இரும்பு மனிதர் டாக்டர் நாகநாதன் அவர்கள் சத்திர சிகிச்சை செய்வதற்காக இலண்டனுக்குச் சென்றாரே, அவரின் நிலை இப்போது எப்படி?

ப: மகாராணியின் மருத்துவர் ஒருவரே இவருக்கு இப்போது வைத்தியஞ் செய்கின்றார். சத்திர சிகிச்சை இல்லாமலே, டாக்டரின் நோயைக் குணப்படுத்த முடியுமா என்று முயற்சி செய்கின்றார்களாம் பூரண தேகாரோக்கியத்துடன் அவர் மீண்டும் இலங்கைக்கு வந்து சிறுபான்மை இனத்தினருக்குச் சுக வாழ்வு கொடுப்பார் என நம்பலாம்.

கே. கலாவல்லி, பேராதனை வீதி
கண்டி.

கே: ஆனந்தவிகடனில் நகைச்சுவைப் படங்கள் வரைபவர், டைரக்டர் ஸ்ரீதர்தானே?

ப: இல்லை, டைரக்டர் ஸ்ரீதருக்குப் படம் எடுக்கத்தான் தெரியுமே தவிரப் படம் போடத் தெரியாதே! ஆனந்தவிகடனில் படம் போடுபவர் தமிழறிஞர் சேஷாசலம் அவர்களின் மகனை டி. எஸ். ஸ்ரீதர் என்பவர் பரணீதரன் என்ற பெயரில் கட்டுரை எழுதுபவரும் இவரேதான்.

யூ. தருமலிங்கம், சாதனை பாடசாலை
நல்லூர்.

கே. மறைந்த "விடிவெள்ளி" பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: பண்பு நிறைந்த மனிதனாகவும், மரபு தவறாக் கவிஞனாகவும் வாழ்ந்த நண்பர் விடிவெள்ளி அன்பர்க்கு அன்பன்; நண்பர்க்கு நண்பன்; தொண்டர்க்குத் தொண்டன்.

சு. சண்முகம், ஏழாலை மத்தி.

கே: தேர்தல் காலத்தில் மூன்று கட்சிகளையும் வால்பிடித்தவர்களின் கதி என்ன?

ப: இவர்களைக் குறிக்கத் தானே 'சந்தர்ப்பவாதம்' என்ற ஒரு சொல்லே அரசியல் அகராதிகளில் இடம்பெற்றிருக்கின்றது! தேர்தல் முடிவதற்கு முன்னர், 'அவர் வெல்லு

வாரோ? இவர் வெல்லுவாரோ?' என்ற தடுமாற்றம் இருந்ததால் மூன்று பேரையும் வால்பிடித்தார்கள் இப்போது வெற்றியாருக்கு? என்பது புலனாகிவிட்டது. இனி, வெற்றி பெற்றவரின் பக்கமே தங்கள் விசேட கவனத்தைத் திருப்பு வார்கள்!

கே. பெருமாள், பலாங்கொடை.

கே; உலகத்திலே பெண்ணினம் என்பது ஒரேயடியாக அழிந்தொழிந்துவிட்டால்?

ப: இதுகால வரையும் "ஓவர் டைம்" செய்துகொண்டிருந்த படைப்புக் கடவுள் இனிமேல் ஒரேயடியாக ஓய்வெடுத்துக்கொண்டு தன் பத்தினியுடன் உல்லாச யாத்திரைக்குப் புறப்பட்டுவிடுவார்!

ஆ. தமிழ்நாதன், பண்டாரவளை.

கே: தந்தை ஈ. வே. ரா. அவர்களின் முழுப்பெயரையும் கூறுவீர்களா?

ப: ஈரோடு வேங்கடசாமி நாயக்கர் ராமசாமி நாயக்கர் என்பதுதான் அவருடைய முழுப்பெயர். பெயரிலேதான் "ஈ" ஒட்டிக் கொண்டிருக்கிறதேயன்றி உண்மையில் அவர் இலகுவில் எவருக்கும் எதையும் ஈயமாட்டார்!

உ. சிற்சபேசலிங்கம், ஏழாலை தெற்கு.

கே: இலங்கையிலே புகழ்மாலை சூடிய தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்கள் யார்?

ப: இன்னும் சில ஆண்டுகள் பொறுத்திருந்தாற்றான் இக் கேள்விக்குரிய சரியான விடையை என்னுற் சொல்ல முடியும்!

கே: இலங்கையிலே அரசியல் துறையிலும் சைவசமயத் துறையிலும் ஈடுபாடுடையவர்கள் யார்?

ப: காலஞ்சென்ற கலாநிதி சு. நடேசபிள்ளை, கொழும்பு நியாய துரந்தரர் சு. சிவசுப்பிரமணியம் ஆகியோரைக் குறிப்பிடலாம்! உடுப்பிட்டி சிவசிதம்பரம், கோப்பாய் கதிரவேற்பிள்ளை, பட்டிருப்பு இராசமாணிக்கம் ஆகியோரும் விரைவிலே இப்பட்டியலிற் சேர்வார்கள் என நம்புவோம்!

கே சுகுமாரன், தெமட்டகொடை.

கே: கேரளத் தேர்தலைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

ப: கேரளத்திலே படித்தவர்கள் அதிகம். அங்கே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகம். படித்தவர்களிடையே அமைதியின்மையும் முரண்பாடுகளும் அதிகம். கேரளத் தேர்தல் அந்த மக்களின் நிலையற்ற நிலையைப் பிரதிபலிக்கின்றது!

சி நாகேந்திரன், வட்டுக்கோட்டை

கே: யாழ் நகர மண்டபத்திலிருந்து தேர்தல் முடிவுகளை அறிவித்தவர் யார்? அவருடைய குரல் கணீரென்றிருந்ததே!

ப: ஒலிபெருக்கிக்கேற்ற எடுப்பான குரலுடைய தேவன் அவர்கள் தான் அந்தப் பணியைச் செய்தவர். யாழ்ப்பாணத்தில் பொதுமக்கள் பெருமளவில் பங்குகொள்ளும் எந்த நிகழ்ச்சியிலும் அறிவிப்பாளராகக் கடமையாற்றுவதற்கு இப்போது எல்லாரும் தேவனைத்தான் அழைக்கின்றார்கள். ஆங்கிலத்திலும் தமிழிலும் சரளமாகவும் நகைச்சுவையாகவும் பேசவல்ல தேவன் இவ் வேலையில் நிறைந்த அனுபவம் மிக்கவர்.

"நாவரசி", பொகவந்தலாவை.

கே: தாங்கள் எப்படியான கேள்விகளுக்குப் பதிலளிப்பீர்கள்?

ப: இப்படியான கேள்விகளுக்கும்......!

∴

உங்கள் கேள்விகளைக் கீழேயுள்ள முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

**தாண்டவக்கோன்**
மே/பா கலைச்செல்வி
**சுன்னுகம்.**

# சுவாமிகளின் வருகை

'அகில உலக திவ்ய ஜீவனசங்க'த் தலைவர் சுவாமி சித்தானந்த மகராஜ் அவர்களும், சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்களும் கடந்த 15-6-65 அன்று யாழ் நகருக்கு விஜயம் செய்தார்கள்.

இன, மத, குல பேதமற்று சுவாமிகளுக்கு யாழ்நகர் கொடுத்த வரவேற்பில் அவர்கள் திளைத்தார்கள். மாலை சித்தானந்த சுவாமிகள் ஆத்மீகப் போதனை செய்யும்போது ஆங்கிலத்தில் உதிர்த்த ஞானமுத்துக்கள் சில:-

இப் பிரபஞ்சத்துக்கு ஒரே கடவுள்தான். அவரைப் பின்பற்றும் வழிகளைத்தான் பலவாக வகுத்துவிட்டிருக்கிறோம், நாம் இந்துவாயிருக்கலாம், கிறீஸ்தவராயிருக்கலாம், இஸ்லாமியராயிருக்கலாம், பௌத்தராயிருக்கலாம், பார்சியராய், சீக்கியராய் வேறு எதுவாகவோ இருக்கலாம். ஆனல் ஒரு உண்மையான ஹிந்துவாய், உண்மையான கிறிஸ்தவனய், உண்மையான பௌத்தனயிருக்கவேண்டும். அதுவே நிஜமான மதவாழ்க்கை. அவனையே கடவுள் தேடுகிறர்—வேண்டுகிறர்.

நாம் தனியே வந்தோம்! தனியே போவோம். அதற்கிடையிலேற்படுத்திக்கொள்ளும் உறவு, உடைமை, சுற்றம் எல்லாமே அநித்தியம். உலகரட்சகரே நித்தியமும் நமது வாழ்வு நோக்கமுமாம்.

குடும்பம் என்பது மகத்தான ஒரு தியானகூடம். கணவனும் மனைவியும் தம்மிடம ஒரே ஆத்மாவையுணர்ந்து தாம் இருவரல்ல சக்தியும் சிவனும்போல ஒருவரேயென வாழவேண்டும்.

ஒழுக்கமே மோட்சத்தின் முதற்படி. எனவே கணவர்களே! ஏகபத்தினி விரதர்களாயிருங்கள். பெண்களே! கணவனே தெய்வமென ஒழுகுங்கள்.

நம் குழந்தைகளுக்கு என்னென்ன செல்வ சுகங்களைத்தான் தேடிவைத்தாலும் ஆத்மாவின் ஒளியை ஏற்ற முனையாகிவிட்டால் அதனல் என்ன பலன்?

ஒவ்வொரு மனிதனும் கடவுள் வதியும் நடமாடும் கோயில்களாவான். (Man is the living, moving Temple of God). எனவே உங்களுக்குள்ளே கடவுளைத் தேடுங்கள்.

∴ ∴ ∴

சுவாமி சச்சிதானந்த யோகிராஜ் அவர்கள் கூறிய சில கருத்துக்கள்:-

எங்கள் குருநாதரிடம் நானும், சுவாமி சித்தானந்தரும் ஒரே சமயத்தில்தான் மாணவர்களாகச் சேர்ந்தோம். ஆனல் சுவாமிகள் எனக்கே இன்று குருவாக இருக்கின்றர்கள். எனக்கு மாத்திரமல்ல... நமது குருநாதர்கூட அவரைப்பார்த்து 'நீ பிளம்பாகிவிட்டாய். நான் உன்னிடமிருந்து எவ்வளவோ கற்கிறேன். எனக்கும் நீயே குரு என்றுரென்றல், அவரின் மகிமைக்கு வேறு சான்றுகள் தேவையில்லை, அவர் குருவின் குரு.

சிவானந்தா என்ற பெயரில் 'வ' பிரதான எழுத்து. குருநாதர் அவரை 'வா' என்று வரவேற்றார்கள். இவரோ 'தா' என்று எல்லாம் பெற்றுக்கொண்டார்கள். எனவே, 'சிவானந்தா'வில் 'வ' போய் 'த' வந்து அவர் எமக்கு 'சிதானந்தஜீ' யாகிவிட்டார். (இமயஜோதி சுவாமி சிவானந்தரின் சிஷ்யரே சுவாமிக ளிருவருமாகும்.)

கடவுள் ஒருவரே என்பதை நாம் நன்குணரவேண்டும். கடவுள் ஏகம் என்பதனாலேயே அவர் எம்முன் தோன்றுவதில்லை. பல கடவுளிருந்தால் தம் மத்தியில் 'யார் பெரியவன்' என்ற சண்டையேற் பட்டுத்தத்தமக்குக் கட்சிசேர்க்க எல்லாருமே நம்முன் பூலோகத்திற்கு வந்து 'ஓட்டு' கேட்கத் தொடங்கி விடுவார்கள். எனவே கடவுள் ஒருவர்தான்!

ஒரு தாளும் பென்சிலும் எடுத்து, 'எனது' என்ற தலையங்கமும் இட்டுக்கொண்டு உங்களுக்கு வேண்டியதையெல்லாம் எழுதுங்கள். 'எனது செல்வம், எனது சுகம், எனது வீடு, எனது மனைவி, எனது பிள்ளை, எனது கார்...' இப்படியே பட்டியல் நீளும். அதில் 'கடவுள்' மாத்திரம் இடம்பெற்றிருக்கமாட்டார். 'எனது கடவுள்' என்று எப்போது எழுதுவோமோ அன்றே ஆத்மாவில் ஒளி வரும்.

"அற்றது பற்றெனில்
உற்றது வீடு"

சாந்தி! சாந்தி! சாந்தி!

தொகுப்பு: மு. கனகராசன்


## வணிகப் பெருமக்களே!

ஈழநாட்டின் இலக்கிய ரசிகர்கள்
ஆசிரியர்கள், மாணவர்கள்,
அரசியல் தலைவர்கள்,
அரசாங்க அதிகாரிகள் —

**அனைவரும் படிக்கும் "கலைச்செல்வி"யில்**

**உங்கள் பொருட்களை**

# விளம்பரஞ் செய்யுங்கள்

நமது விளம்பரப் பிரதிநிதியாக கீழ்க்கண்டவரை நியமித்திருக்கின்றோம்.

**திரு. சி. திருச்செல்வம்**

**இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி**

அவருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

நிர்வாகி, கலைச்செல்வி.

# பேரும் பரிசும்-3

## சரியான விடைகள்

| | | |
|---|---|---|
| வியாசர் விருந்து | — | ராஜாஜி |
| நெஞ்சில் ஒரு முள் | — | மு. வரதராசனர் |
| பாவை விளக்கு | — | அகிலன் |
| சிலம்பொலி | — | நாவற்குழியூர் நடராஜன் |
| இலக்கியவழி | — | பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை |

மேலேயுள்ளபடி பலர் விடைகளைச் சரியாகவும் தெளிவாகவும் எழுதியனுப்பியிருந்தனர். சரியான விடையனுப்பியோரின் பெயர்களை எழுதித் திருவுளச் சீட்டுமூலம் தெரிவுசெய்ததில் கீழ்க்கண்டோர் பரிசுக்குரியவர்களானுர்கள். பரிசுகள் பலவற்றைப் பெறும் நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை மாணவர்களைப் பாராட்டுகின்ருேம்.

முதலாம் பரிசு : 10 ரூபா.
**செல்வன். ப. தெய்வேந்திரம்**
மகேஸ்வரி வித்தியாசாலை,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

இரண்டாம் பரிசு : 5 ரூபா.
**செல்வி. க. பவளராணி**
முத்துத்தம்பி வித்தியாசாலை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

மூன்ரும்பரிசு : "கலைச்செல்வி ஓராண்டுச் சந்தா.
**M. குலவீரசிங்கம்,**
புத்தகக்கடை,
புகையிரத நிலையம்,
யாழ்ப்பாணம்.

## ஆறுதல் பரிசுகள்

1 மா. பத்மாதேவி, மகேஸ்வரி வித்தியாசாலை, நாயன்மார்கட்டு.
2 க. பவானி, 205, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி.
3 மா. புவனேஸ்வரன், மகேஸ்வரி வித்தியாசாலை, நாயன்மார்கட்டு,
4 வே. க. இரகுபதி, 29, இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டு.
5 சு. விமலாதேவி, மகேஸ்வரி வித்தியாசாலை, நாயன்மார்கட்டு.
6 "ரஞ்ஜி" மே/பா சீ. சிவஞானசுந்தரம், ஏழாலை.
7 மு. சுகிர்தமணி, மகேஸ்வரி வித்தியாசாலை, நாயன்மார்கட்டு,
8 க அன்னம்மா, 422, கே. கே. எஸ். வீதி, வண்ணுர்பண்ணை.
9 வ. கோகிலாம்பாள், நெசவுநிலையம், சோளாவத்தை, வேலணை.
10 வே. குமாரசாமி, கல்வயல், சாவகச்சேரி.
11 சி. சரோஜினி, ஏழாலை மேற்கு சுன்னுகம்.
12 நா. சந்திராதேவி, மகேஸ்வரி வித்தியாசாலை, நாயன்மார்கட்டு.